


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524







29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Cnaada
Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1593 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 16, 2026










# "நாற்பது வருட கால இடப்பெயர்வு, புலம் பெயர்வு ஆகியவற்றுக்குப் பின்னர் ஈழத் தமிழர்கள் பல நாடுகளிலும் தங்களை மீளக் கட்டியெழுப்பி வர்த்தகம், கல்வி, பொருளாதாரம் அறிவு ஆகியவற்றில் உயர்ந்துள்ளனர்"

## "அனைத்துலக தமிழர் பேரவை" யின் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு – 2026 நேற்று வியாழனன்று ஆரம்பமாகியபோது அமைப்பின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தனது உரையில் தெரிவிப்பு

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டதும் உலகின் பல நாடுகளிலும் கிளைகளை கொண்டதுமான "அனைத்துலக தமிழர் பேரவை" ஏற்பாட்டில் நடைபெறும் "உலகத் தமிழ் ஆய்வு மாநாடு-2026 . நேற்று 15ம் திகதி வியாழக்கிழமை காலை கனடா- ஸ்காபுறோவில் உள்ள செனறானியல் உயர் கலலூரி வளாக விழா மண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது!

அங்கு தலைமை உரையாற்றிய 'அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் தலைவரும் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மிகவும் காத்திரமானதும் உறுதி நிறைந்ததுமான உரை ஒன்றை ஆற்றினார்.

அவர் தனது உரையில் "நாற்பது வருட கால இடப்பெயர்வு மற்றும் புலம் பெயர்வு ஆகியவற்றுக்குப்பின்னர் ஈழத் தமிழர்கள் தற்போது உலகின் பல நாடுகளிலும் தங்களை மீளக் கட்டியெழுப்பி வர்த்தகத்திலும் கல்வியிலும் பொருளாரத்திலும் அறிவிலும் ஆற்றலில் உயர்ந்து நின்ற வண்ணம் உலகிற்கு வழிகாட்டுகின்ற அளவிற்கு பல்வேறு தளங்களில் நிமிர்ந்து நிற்கின்றனர. அந்த ஒற்றுமையையும் உறுதியையும் உயர்வையும் உலகத்தவர்களுக்கு காட்டும் வகையிலேயே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)






# ஸ்காபுறோ Majestic City வணிக வளாகத்தில் நடைபெற்ற "பல்லின உணவுத் திருவிழா"வில் மக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டிய ரொறன்ரோ நகர மேயர் வேட்பாளர் Brad Bradford

கடந்த வார இறுதியின் நீண்ட விடுமுறை நாட்களான சனி. ஞாயிறு, திங்கள் ஆகிய நாட்களில் ஸ்காபுறோ ஆயதநளவஉை ஊவைல வணிக வளாகத்தில் நடைபெற்ற பல்லின உணவுத் திருவிழாவில் பல இனங்க்ளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு உணவுத் திருவிழாவை கொண்டாடி மகிழ்ந்தார்கள். அந்த மூன்று நாட்களில் ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மக்களைச் சந்திக்கும் நோக்கத்தில் ரொறன்ரோ நகர மேயர் வேட்பாளர் டீசயன டீசயனகழசன அவர்கள் தனது பிரச்சாரக் குழுவினரோடு வருகை தந்தார். அப்போது ரொறன்ரோ வாக்காளர்கள் பலர் **Brad Bradford** அவர்களோடு உரையாடியபொழுது புதிதாக வீடுகளை வாங்கும் மக்கள் வழமையாக செலுத்தும் **Land Transfer Tax** என்னும் வரியை தான் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் நீக்கவுள்ளதாக தெரிவித்தபொழுது அங்கு கூடி நின்றவர்கள் அதனை வரவேற்றார்கள். அத்துடன் ஸ்காபுறோவில் புதிதாக ஆரம்பிக்கப்படும் வர்த்தக நிறுவனங்களுக்கான நகரசபையின் அனுமதிப் பத்திரத்தை விரைவில் பெற்றுக் கொள்ளும் வழி முறைகளை அறிமுகம் செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார். மேற்படி உணவுத் திருவிழா **Majestic City** வணிக வளாகம் மற்றும் **Behind Me** ஊடகம் ஆகியவை இணைந்து நடத்திய ஒன்றாகும்.













# கடந்த காலங்களில் இலங்கைச் சிறைகளில் மதத் தலைவர்களின் நிலைகண்டு வெம்பியிருக்கிறேன்



அநுர ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் நினைவுபடுத்திய டக்ளஸ் தேவானந்தா “தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அனைத்து மதத் தலைவர்களும் சிறை சாலைகளில் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடாத்தப்படுவதை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றேன்.” என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்து மதங்களின் தலைவர்களும் சிறைச்சாலைகளில் கௌரவமாக நடாத்தப்படுவதை சட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவிற்கு எழுதியுள்ள அவசர கடிதத்திலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, “பௌத்த மதத் தலைவர்களுள் ஒருவரான கலகொட அத்தே ஞானசார தேரருக்கான சிறை தண்டனை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தேரருக்கு சிறைச்சாலை நடைமுறைகளுக்கு அமைவாக ஆடைகள் வழங்கப்பட்டமை நாட்டில் பேசுபொருளாக மாறி இருக்கின்றது.

பௌத்த மத பீடங்களும் இதுதொடர்பாக கருசணை காட்டி வருகின்ற நிலையில், குறித்த விவகாரத்தினை சுமூகமாக தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் விரைவான நடவடிக்கைகளை முன்னெடுப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

குறுகிய அரசியல் நலன்களுக்கு இவ்விவகாரம் பயன்படுத்தப்பட்டு நாட்டில் தேவையற்ற அசௌகரியங்களுக்கு இடமளிக்காத வகையில் தங்களின் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பபடும் விரைவான நடவடிக்கைகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், சட்ட ரீதியான திருத்தங்கள் ஊடாக குறித்த விவகாரத்திற்கான நிரந்தர தீர்வு உறுதிப்படுத்துகின்றபோது, சிறைகளில் அடைக்கப்படுகின்ற ஏனைய மதத் தலைவர்களும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் சட்டத் திருத்தங்களில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

80 களில் வெலிக்கடை, மட்டக்களப்பு போன்ற சிறைச்சாலைகளில் நான் இருந்த காலத்தில் சக கைதிகளாக இருந்த மதத் தலைவர்கள் அநாகரீகமாக நடாத்தப்படுவதை பார்த்து வெம்பிய தருணங்கள் நினைவிற்கு வருகின்றன.

பின்னர், நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்த காலத்தில், சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த இந்து, கிறீஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் தலைவர்கள் கடிதங்கள் மூலமும் தங்களின் உறவினர்கள் ஊடாகவும் சிறைகளில் எதிர்கொள்கின்ற அசௌகரியங்களை எனக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அவை தொடர்பாக சம்மந்தப்பட தரப்பினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு தீர்வுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறான அனுபவம் உங்களுக்கும் இருக்கும் என்று நம்புகின்றேன்.

எனவே தற்போதைய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, அனைத்து மதத் தலைவர்களும் சிறை சாலைகளில் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடாத்தப்படுவதை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றேன்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1
Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்
உதயன்
Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ஒரே நாளில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று அக்கறையோடு மக்களின் முறைப்பாடுகள்,பாடசாலைச் சமூகத்தின் தேவைகள் பற்றி கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர்!

யாழ்ப்பாண மாகாணத்தை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தில் முன்னர் பணியாற்றிய ஆளுனர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் தொடர்பாக அங்கு வாழுகின்ற மக்களுக்கும், கல்வியாளர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட பிரஜைகள் போன்றவர்களுக்கு போதிய திருப்தியில்லா ஒரு நீண்ட காலம் இருந்தது. அப்போது யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய அருகில் உள்ள மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் தேவைகளை "கவனிக்க நேரம்" இல்லாவர்கள் போல செயற்பட்டார்கள். குறிப்பாக மன்னார் மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டம் போன்ற பகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் கொழும்பில் ஆட்சியில் உள்ள தலைவர்களோடு நெருக்கமான நட்பைக் கொண்டிருந்து அவர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கவனமாக இருந்தார்கள்.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோகும் ஆபத்து பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற ஆயுதமாக சமர்ப்பிக்கப்பட்ட போது தலைவர் சம்பந்தன் மற்றும் அவரை இயக்கியவந்நத சுமந்திரன் போன்றவர்கள் தங்கள் சக பாராளுமன்ற உறுப்பினர்களை ரணிலின் ஆபத்து விலகிச் செல்லும் அளவிற்கு அந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்களீத்தார்கள். அந்நேரம் உலகெங்கும் உள்ள தமிழர்கள் "மூக்கில் விரல்களை வைத்து" பார்த்துக்கொண்டிருந்த நேரம் சிங்கள மக்கள் மத்தியில் பல வினாக்கள் தோன்றின. துமிழர்களுக்கோ அன்றி சிங்கள மக்களுக்கோ அன்றி இஸ்லாமிய மக்களுக்கோ நன்மைகளிலும் பார்க்க அநியாயங்களைச் செய் ரணிலுக்கு வாக்களிக்க எவ்வாறு தமிழ் பேசும் எம்பிக்கள் வாக்களித்தார்கள்? அவர்களிடம் கேள்விகளைக் கேட்க மக்களுக்கு தைரியம் இல்லாமல் போய்விட்டதா? என்றெல்லாம் வினாக்களை முன்வைத்தார்கள்.

ஆனால் தனது பதவியை மீண்டும் தொடர்ந்த ரணில் தனது எஞ்சிய பதவிக்காலத்தில் பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான லைசன்ஸ் மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி லைசன்ஸ் போன்றவற்றை வழங்கினார். இதனாலன் நமது எம்பிக்கள் சுகபோகங்களை அனுபவித்து அவற்றில் சிலர் தகாத செயல்களில் ஈடுபட்டு அந்த விவகாரங்கள் நீதி மன்றம் வரையில் சென்றமை எமது பழைய .அரசியல்வாதிகளின் "கதைகள்".

இவ்வாறானவர்கள் கொடிய யுத்தத்தில் கொல்லப்பட்ட போராளிகளுக்கோ அன்றி அவர்களின் குடும்பங்களுக்கோ உதவி செய்ய முன்வரவில்லை..

தங்களுக்கு மேலும் என்ன சலுகைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு தங்கள் பதிவிக் காலத்தை "அனுபவித்தார்கள்."

2009ம் ஆண்டு தொடக்கம் கடந்த பொதுத் தேர்தல் வரையிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றிய உயர் அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் தேவைகளை கவனிக்காமல் அவர்களின் துன்பங்களும் துயரங்களும் அடங்கிய காட்சிகளை "சினிமா" பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்துடன் தங்களுக்குள் "சண்டையும்" பிடித்துக் கொண்டார்கள்.

ஆனால் தற்போது நீண்ட காலமாக அரசாங்க அதிபராகவும் பின்னர் புதிய அரசாங்கத்தால் வட மாகாண ஆளுனராகவும் நியமனம் செய்யப்பெற்ற வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் சேவையானது வடக்கு மாகாண மக்களாலும் கொழும்பில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளினாலும் நன்கு கவனிக்கப்பெறுகின்ற ஒன்றாக விளங்குகின்றது.

இந்நேரத்தில் மற்றுமொரு தமிழ் பேசும் ஆளுனர் ஒருவர் பற்றியும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். முன்னாள் ஜனாதிபதியும் சில நிதி மோசடிகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக நியமனம் செய்யப்பட்ட செந்தில் தொண்டமான் என்பவர் தனது பதவிக்காலத்தில் ஒரு வெளிப்படைத் தன்மை இலலாத நிர்வாகத்தை நடத்தி தானும் பல சுகபோகங்களை அனுபவித்த வண்ணம் பெரும் நிதி மோசடிகள் மற்றும் தனது சகாக்களுக்கு சட்ட விரோதமான முறையில் அரசாங்க காணிகளை வழங்கியமையும் தற்போதைய அநுர அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்வாறு யுத்தகாலத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பஞ்சலிங்கம் அவர்கள் ஒரு இரண்டாம் நிலை அதிகாரிபோல வீதிகளில் இறங்கி மக்களுக்காக சேவையாற்றினாரோ அதனிலும் அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒருவராக ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் மக்களாலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாலும் நேசிக்கப்படுகின்றார்.

அவரது பணிகள் எப்போதும் மக்கள் சார்ந்து பாடசாலைக் கல்வி சார்ந்தும் தொழில் முனைவோரது முன்னேற்றம் கருதியும் இடம்பெறுவதும் அவரது பணி தொடர்பான விஜயங்கள் அர்ப்பணிப்போடும் கவனிப்போடும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது நன்கு வெளிப்படையாகவே தெரிகின்றன.

இந்த வாரத்தில் அவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நேற்று 8ம் தி திகதி வியாழக்கிழமை களப் பயணத்தை மேற்கொண்டு, மக்கள், பாடசாலை சமூகம் மற்றும் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் கேட்டறிந்த விடயம் தற்போது கொழும்பில் உள்ள உயர் அரச அதிகாரிகள் பாராட்டும் ஒரு விடயமாக உள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி மற்றும் சுழிபுரம் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் முதலீட்டுச் செயற்பாடுகளை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டு வரும் அல்லை விலாஸ் முதலீட்டுத் திட்டத்தையும் ஆளுநர் பார்வையிட்டார். இத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஏற்பட்டிருந்த சில தாமதங்கள் முன்னதாக ஆளுநரின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் மூலம் குறித்த பிரதேசத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் கிடைக்கக்கூடிய பயன்கள் தொடர்பில் முதலீட்டாளர் சண்முகநாதன் சுகந்தனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் கல்லுண்டாய் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குச் சென்றார். வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் விசேட பணிப்பின் பேரில் ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதியில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் தாழ்நிலப் பகுதிகளுக்கு மண் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதை ஆளுநர் நேரில் பார்வையிட்டார்.

இதன்போது அங்கு வசிக்கும் மக்கள், தாங்கள் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டிருந்தபோதிலும், அதன் பின்னர் நீண்டகாலமாக மண் நிரவுதல் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தனர். தற்போது அவை முன்னெடுக்கப்படுவதற்கு நன்றியும் தெரிவித்த அவர்கள், வீடுகளில் காணப்படும் சில திருத்தப் பணிகளையும் மேற்கொடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர். மக்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிந்த ஆளுநர், நிலவரங்கள் தொடர்பில் உரிய முறையில் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி மற்றும் அராலி முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற ஆளுநர், அங்குள்ள கட்டடத் தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாடசாலைகளின் ஏனைய தேவைகள் தொடர்பில் அதிபர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரிடம் நேரில் கேட்டறிந்தார். இந்த விஜயமானது ஆளுனர் அவர்கள் கல்வி சார் நடவடிக்கைகள் சரியாக இடம்பெற வேண்டும் என்பதை உன்னிப்பாக கவனிக்கின்றார் என்பதை பறைசாற்றுகின்றது. தொடர்ந்து சில பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை அடையாளம் கண்டு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் கையாள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறு தற்போதைய வடக்கு மாகாண ஆளுனர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரமல்ல தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் எவ்வித தளர்வும் இன்றி விஜயங்களை மேற்கொண்டு அனைத்தையும் நேரடியாகக் கவனம் செலுத்துவதை பாதிக்கப்பட்ட எமது மக்கள் நன்றியுடன் நோக்குகின்றார்கள் என்பதும் நிஜமே!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பார்வையாளர் அரங்கு மற்றும் நடைபாதை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது

கல்வி மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் ஆறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கான பார்வையாளர் அரங்கு மற்றும் நடைபாதை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 15ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் நடைபெற்றது.

கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் குறித்த அடிக்கல் நாட்டும நிகழ்வு பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.



குறித்த நிகழ்வில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் இணைப்பாளர் மருங்கன் மோகன், வலய கல்வி பணிப்பாளர், கல்லூரி முதல்வர் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட கடத் தொழில் அமைச்சர் இராமலிங்கம்ங சந்திரசேகரன் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், கல்வியின் நிலை மற்றும் சீர்திருத்தம்: கல்வி பின்தங்கிய நிலைக்குச் சென்றுள்ளது. அதனால்தான் கல்வித் திட்டத்தை மேம்படுத்தி மாணவர்களைப் போட்டி நிறைந்த உலகத்தில் சுயாதீனமாக இயங்க வைக்கும் நோக்கில் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கலாச்சாரம், வறுமை மற்றும் கல்வியறிவு குறைபாடுள்ள இடங்களில் கலாச்சாரம் மற்றும் சீரழிவுகள் ஏற்படுகிறது. மேலும், போதைப்பொருள் பழக்கம் மற்றும் மதுபான சாலைகளின் அதிகரிப்பு சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பெண்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி, பெண் பிள்ளைகள் நகர் பகுதிகளுக்கு வந்து கல்வி கற்பதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன. அவற்றைச் சீர்செய்யும் வகையில் பள்ளிகளை மேம்படுத்தி, ஆசிரியர்களுக்குப் போதுமான சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இளைஞர்களின் மனநலம் மற்றும் தற்கொலைகள் சமீப காலமாக அதிகரித்துள்ளன. குறிப்பாக மாணவிகள் மத்தியில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதற்கு சமூக வலைதளங்களின் தவறான பயன்பாடும் ஒரு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

# தென்னாப்பிரிக்க தமிழ் வம்சாவளிக் குடும்பத்தின் வாரிசு நவநீதம் பிள்ளை அம்மையார் 2026 நோபல் பரிசு பெற்றமை உலகத் தமிழர்களுக்கு உவகை தரும் பெருமையாகும்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

## இவ்வாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு பெறும் அன்னாருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை



"தென்னாபிரிக்காவின் தமிழ் வம்சாவளிக் குடும்பம் ஒன்றின் வாரிசான நவநீதம் பிள்ளை அம்மையாருக்கு 2026ம் ஆண்டிற்கான நோபல் பரிசு வழங்கப்பெற்றுள்ளமை உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுக்கு உவகையையும் பெருமையையும் அள்ளிக்குவிக்கும் ஒரு கௌரவமாகும். இந்த அற்புதமான தருணத்தில் கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவை தனது வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் அவருக்குத் தெரிவிக்கின்றது. இந்த வெற்றியைக் கொண்டாடும் உலகத் தமிழர்களோடு எமது அமைப்பும் இணைந்து கொள்கின்றது".

மேற்கண்டவாறு, இவ்வாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு பெறும் நவநீதம் பிள்ளை அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலகத் தமிழர் பேரவையின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு நிமால் விநாயகமூர்த்தி தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

2026 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திருமதி நவநீதம் "நவி" பிள்ளைக்கு அனைத்துலகத் தமிழர் பேரவை (FGT) தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது. மனித உரிமைகள், நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக அவர் ஆற்றிவரும் வாழ்நாள் பணிக்கு இவ்வுயரிய விருது சிறப்பான அங்கீகாரமாக அமைந்துள்ளது.

தென்னாப்பிரிக்காவில் தமிழ் வம்சாவளிக் குடும்பத்தில் பிறந்த நவநீதம் பிள்ளை அவர்கள், நிறவெறி ஆட்சியின் அநீதிகளை எதிர்கொண்டு, சர்வதேச அளவில் தலைமைத்துவ நிலைக்கு உயர்ந்தமை உலகத் தமிழர்கள் அனைவருக்கும் பெருமையையும் ஊக்கத்தையும் அளிக்கிறது. அவரது சாதனைகள், அவரது தமிழ் வேர்களின் வலிமையையும், புலம்பெயர்ந்தோரின் வழித்தோன்றல்கள் தாம் வாழும் நாடுகளுக்கும் மனிதகுலத்திற்கும் ஆற்றக்கூடிய மகத்தான பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

இவர் 2008 முதல் 2014 வரை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளராகப் பணியாற்றினார்.

அத்துடன் 1999 முதல் 2003 வரை ICTR-இல் பணியாற்றிய பிள்ளை, அதன் தலைமை நீதிபதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2003-இல், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டவாதியாகவும் நியமிக்கப்பட்டார்.

கல்வி, சம வாய்ப்புகள், சமூகப் பங்கேற்பு மற்றும் தலைமைத்துவத்தின் ஊடாகப் புலம்பெயர்ந்த மக்களையும் சமூகங்களையும் வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை இந்த அங்கீகாரம் மேலும் வலியுறுத்துகிறது. இளைஞர்கள், பெண்கள் மற்றும் நலிவுற்ற சமூகங்கள் தடைகளைக் கடந்து, தமது முழுத் திறனையும் வெளிப்படுத்துவதற்கு உறுதுணையாகச் செயல்பட அவரது வாழ்க்கைப் பயணம் எம்மை ஊக்குவிக்கிறது.

நவநீதம் பிள்ளை அவர்களின் இச்சாதனையை மிகுந்த மரியாதையுடனும் நன்றியுணர்வுடனும் கொண்டாடுகிறோம். மனித கண்ணியத்தைப் பாதுகாக்கவும், பாகுபாடுகளுக்கு எதிராகக் குரல்கொடுக்கவும், நீதியும் அமைதியும் நிறைந்த உலகைக் கட்டியெழுப்பவும் அவரது துணிவும் அர்ப்பணிப்பும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு வழிகாட்டட்டும்.

வாழ்க் தமிழ்! வெல்க தமிழினம்!

இங்ஙனம்,
**நிமல் விநாயகமூர்த்தி** - தலைவர்

அனைத்துலகத் தமிழர் பேரவை தலைமையகம் - கனடா

---



# தமிழர் தாயகத்தின் அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கத்துக்கு அவுஸ்திரேலியாவில் உணர்வுபூர்வ அஞ்சலி

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் நேரடியாகக் கலந்துகொண்டு அவர் பற்றிய நினைவுரையை ஆற்றினார்

அண்மையில் யாழ்ப்பாணத்தில் காலமான அரசியல் ஆய்வாளரும் சமூக, அரசியற் செயற்பாட்டாளரும், சமூக விஞ்ஞான ஆய்வுமையத்தின் தலைவருமான சி.அ. யோதிலிங்கத்தின் மறைவையொட்டி அவருக்கு அவுஸ்திரேலியாவில் உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

சிட்னி ரெக் பர்ன் சமூக மையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11.10.2026) இந் நினைவஞ்சலி நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கலந்து கொண்ட தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சி.அ. யோதிலிங்கம் பற்றிய நினைவுரையை ஆற்றியிருந்தார்.

அவுஸ்திரேலியாவின் பிரபல இதய சிகிச்சை நிபுணர் வை. மன்மோகன் தலைமை தாங்கிய இந்நினைவஞ்சலி நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தார்கள். இந்நிகழ்ச்சியை அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரசும், நியூ சவுத் வேல்ஸ் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

---

# அரச பயங்கரவாதம் இனியும் வேண்டாம் PTA ஐ இரத்துச் செய்! PSTA ஐக் கிழித்தெறி"

## கொட்டும் மழையிலும் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் பெரும் போராட்டம்




அரச பயங்கரவாதம் இனியும் வேண்டாம் என்பதை வலியுறுத்தியும், நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) உடனடியாக இரத்துச் செய்யக் கோரியும், முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தை (PSTA) உடனடியாகக் கைவிடுமாறு வலியுறுத்தியும் கொழும்பில் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை கொட்டும் மழையிலும் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக அன்று பிற்பகல் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

காலங்காலமாகப் பயன்பாட்டிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இரத்துச் செய்ய வேண்டும் என்று இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தைக் கைவிடுமாறும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

அனைத்துவிதமான அரச அடக்குமுறைச் சட்டங்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி செயலக வளாகப் பகுதியில் இந்தப் போராட்டம் நடைபெற்றமையால் அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.






---

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கான அழைப்பில் சென்ற நாவாந்துறையைச் சேர்ந்த நபர் அங்கேயே உயிரிழப்பு!

பு. கஜிந்தன்

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்ற ஒருவர் அங்கேயே மயங்கி உயிரிழந்த சம்பவமானது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதன்போது நாவாந்துறை - யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த பங்கிராசா சுரேஷ்குமார் (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபருக்கும் அயல்வீட்டுக்காரருக்கும் இடையே ஒழுங்கை பிரச்சினை காணப்படுகின்ற நிலையில் குறித்த நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அது குறித்து முறைப்பாடு பதிவு செய்தார்.

அந்தவகையில் பொலிஸார் அவர்களை அழைத்து சமாதானப்படுத்தினர். இரு தரப்பும் சமாதானமாக போவதாக கூறிய நிலையில் குறித்த நபர் கதிரையில் இருந்தவாறே மயக்கமுற்றுள்ளார். பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். சடலம் மீது உடற்கூறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# "மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தமிழியல் ஆய்வு, இலக்கியத் திறனாய்வுப் பங்களிப்புக்களைக் கௌரவிக்கும் வகையில் ஆய்வை மேற்கொண்டு கலாநிதித் பட்டம் பெற்ற முனைவர் வாசுகியை நாம் கொண்டாட வேண்டும்"

## "பன்முக ஆற்றலான் கா. சிவத்தம்பியின் தமிழியல் பார்வை" நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கி பேராசிரியர் இ. பாலசுந்தரம் புகழாரம்

"இலங்கைத் தமிழர்களின் இலக்கிய திறனாய்வுத் துறையிலும் தமிழியல் தொடர்பான ஆய்வுத் துறைகளில் தன்னை ஈடுபடுத்தி உயர்ந்த அர்ப்பணிப்புடன் தன் வாழ்வை தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் வாழ்ந்து மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் தமிழியல் ஆய்வு மற்றும் இலக்கியத் திறனாய்வுப் பங்களிப்புக்களைக் கௌரவிக்கும் வகையில் தனது ஆய்வை மேற்கொண்டு கலாநிதித் பட்டம் பெற்ற முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களை நாம் கொண்டாடி மகிழ்ந்து அவரையும் அவரது குடும்பத்தினரை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும்".



இவ்வாறு கடந்த 10-10-2026 அன்று சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களின் "பன்முக ஆற்றலான் கா. சிவத்தம்பியின் தமிழியல் பார்வை" என்னும் நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கி உரையாற்றிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் புகழாரம் சூட்டினார்.

அன்றைய வெளியீட்டு விழா ஸ்காபுறோ ஶ்ரீ சத்தியசாய் பாபா நிலைய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கனடா வாழ் கலை இலக்கிய ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள் கலைஞர்கள் தொலைக்காட்சிக் கலைஞர் மற்றும் ஊடகவியலாளர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் மண்டபத்தை நிரப்பியிருக்க இந்த அரிய நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

அன்று வெளியிடப்பெற்ற நூலானது ஒரு ஆழமான தமிழியல் மற்றும் தமிழின் தொன்மை வரலாறு என அனைத்துப் பகுதிகளையும் கொண்டதாக அமைந்ததால் அது தொடர்பான ஆய்வு மற்றும் விமர்சனம் போன்ற பணிகளை நீண்ட கால தமிழியல் மற்றும் இலக்கணம் தொடர்பான ஈடுபாடு கொண்ட கல்வியாளர்களால் ஆற்றினார்கள். எனவே இந்த நிகழ்வானது தமிழின் ஆழத்தையும் அதன் அழகையும் எடுத்தியம்பும் ஒரு வரலாற்றுப் பெருவிழாவாக இடம்பெற்றது என்றால் அது மிகையாகாது.






















Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

Dr. Pushpa.V & Associates
Dentist

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
We are accepting CDCP insurance.



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நோபல் பரிசுப் பெற்ற தமிழ்ப் பெண்மணிக்கு தமிழ்நாடு அரசு சார்பில் பாராட்டு விழா நடத்தப்பெற வேண்டும்!

## முதல்வர் விஜய் அவர்களுக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள்



சர்வதேச அளவில் மனிதகுலத்திற்கு எதிராக இனப்படுகொலை மற்றும் பேரழிவுகளில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்படாமல் தப்பி வருவதற்கு எதிராகப் போராடுவதையே தனது வாழ்நாள் கடமையாகக் கொண்டு தொண்டாற்றி வரும் தென்னாப்பிரிக்கா வாழ் தமிழரான நவநீதம் நவி பிள்ளை அவர்களுக்கு இவ்வாண்டிற்கான நோபல் அமைதிப் பரிசு வழங்கப்பட்டிருக்கும் செய்தி உலகமெல்லாம் வாழும் தமிழர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியையும் பெருமித உணர்வையும் ஊட்டியுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளராக அவர் இருந்தபோது, 2009ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்களுக்கெதிராக சிங்கள அரசு நடத்திய இனவெறிப் படுகொலைகள் குறித்தும் மற்றும் ருவாண்டா, பாலஸ்தீன, காசா பகுதி ஆகியவற்றில் நடந்த இனவெறிப்படுகொலைகள் குறித்தும் விசாரிக்க அமைக்கப்பட்ட நீதிமன்றங்களின் தலைவராக இருந்து நேர்மையுடனும், நெஞ்சத்துணிவுடனும் இனவெறி அரசுகளுக்கு எதிராக அவர் அளித்த அறிக்கைகளும், தீர்ப்புகளும் இதுவரை யாரும் செய்ய துணியாதவையாகும்.

புலம்பெயர்ந்த மக்களுக்கும் தென்னாப்பிரிக்கா நாட்டிற்கும், தாய்த் தமிழகத்திற்கும் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கும் அவர் பெருமைத் தேடித் தந்திருக்கிறார். அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றுள்ள அவருக்கு தமிழக அரசின் சார்பிலும், மக்களின் சார்பிலும் பாராட்டுவிழா நடத்த முன்வருமாறு தமிழக முதல்வர் விஜய் அவர்களை வேண்டிக்கொள்கிறேன். இவ்விழாவில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் மற்றும் சமுதாய தொண்டு நிறுவனங்களின் தலைவர்களும் பங்கேற்று இவ்விழாவினை அனைத்துத் தமிழர்களும் கொண்டாடும் வகையில் சிறப்பான ஏற்பாடுகளை செய்யப்படவேண்டும்.

அரசியல் மற்றும் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ்நாட்டுத் தமிழர்களும் தமிழக அரசும் பெருமித உணர்வுடன் ஒன்றுபட்டு, அவருக்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் இவ்விழாவை விரைவில் நடத்த முன்வருமாறு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,
**பழ. நெடுமாறன்** - தலைவர்

# யாழ்ப்பாணம் பழைய பூங்கா விளையாட்டரங்கு தொடர்பாக ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள் "மோதல்"



## இந்த விவகாரம் குறித்துத் தொடர்ந்து பேசுவதைத் தவிர்த்த அமைச்சர் இ.சந்திரசேகர், அடுத்தடுத்த நிகழ்ச்சி நிரல்களை எடுத்து கூட்டத்தை முடித்துக்கொண்ட "தந்திரம்"

**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் உள்ளக விளையாட்டரங்கை அமைக்கும் விவகாரத்தில், அரசின் முக்கிய தரப்பினருக்கு இடையிலேயே பெரும் குழப்பமும் காரசாரமான விவாதங்களும் ஏற்பட்டுள்ளமை அம்பலமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் 14ம் திகதி புதன்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்புகையில், "விளையாட்டரங்கு அமைக்கும் பணிகள் தற்போது எந்தக் கட்டத்தில் உள்ளன? இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை என்ன செய்யப் போகின்றீர்கள்?" என்று வினவினார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாரும் எதிர்பாராத வகையில், "இந்த விளையாட்டரங்கை அமைப்பதற்கான இடத்தை யார் தெரிவு செய்தது? இதற்கான அனுமதியை வழங்கியது யார்?" என்று அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்தார்.

இதனைச் சற்றும் எதிர்பாராத அமைச்சர் இ. சந்திரசேகர், "விளங்காமல் பேசக் கூடாது... கொஞ்சம் இருங்கள் தம்பி, நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று உரத்த தொனியில் கண்டிக்கும் வகையில் பேசினார்.

இருப்பினும், நாடாளுமன்ற உறுப்பினர்களானக. இளங்குமரன் மற்றும் ஜெ.ரஜீவன் ஆகிய இருவரும் மாறி மாறி குறுக்கிட்டு, முறையான அனுமதிகள் பெறப்பட்டதா என்றும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் அடுத்தகட்ட நிலைப்பாடு என்ன என்றும் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்பினர்.

இந்த உள்ளக விளையாட்டரங்கு அமைப்பதற்காக ஏற்கனவே அடிக்கல் நாட்டப்பட்டிருந்த போதிலும், நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. இவ்வாறான பின்னணியில், ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான கருத்து முரண்பாடுகள் இந்தக் கூட்டத்தின் ஊடாக பகிரங்கமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளன.



எனினும், இந்த விவகாரம் குறித்துத் தொடர்ந்து பேசுவதைத் தவிர்த்த அமைச்சர் இ.சந்திரசேகர், அடுத்தடுத்த நிகழ்ச்சி நிரல்களை எடுத்து கூட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.




# ஈழத்துச் சகோதரிகள் தமிழ்நாட்டில் சாதனை!

## தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கங்களையும் சாம்பியன் பட்டத்தையும் வென்ற தீரச் செயல்

**- ந.லோகதயாளன்**

தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநில அளவிலான கல்லூரி மற்றும் பாடசாலைகளுக்கு இடையிலான நீச்சல் போட்டியில் அபார திறமையை வெளிப்படுத்தி, சாம்பியன் பட்டத்தையும் பதக்கங்களையும் வென்று ஈழத்துச் சகோதரிகளான தனுஜா மற்றும் டிலாஜினி ஆகியோர் சாதனை படைத்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நாமக்கல் மாவட்டத்தில் இம்மாநில அளவிலான நீச்சல் போட்டிகள் நடைபெற்றன. இதில் கல்லூரி மாணவிகளுக்கான பிரிவில் பங்கேற்ற தனுஜா சாம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றி முதலிடம் பிடித்தார்.

அதேவேளை, பாடசாலை மாணவிகளுக்கான பிரிவில் பங்கேற்ற டிலாஜினி, மூன்று போட்டிகளில் முதலிடத்தைப் பெற்று 3 தங்கப் பதக்கங்களையும், இரண்டு போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று 2 வெள்ளிப் பதக்கங்களையும் வென்று சாதனை படைத்தார்.

தமிழ்நாட்டில் அகதிகளாக வாழ்ந்துவரும், யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஜெயக்குமார் - அருள்ஜோதி தம்பதியரின் புதல்விகளான தனுஜா மற்றும் டிலாஜினி ஆகியோர், நீண்டகாலமாகவே இந்தியளவில் நடைபெறும் பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்றுத் தமது அபார திறமைகளை வெளிப்படுத்தித் தொடர்ச்சியாகச் சாதனைகளைப் படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# வடக்குக்கு வருகை தந்த இலங்கைக்கான முதலாவது கியூபெக் தூதுவர் என்ற பெருமையைப் பெற்ற மேன்மைதங்கிய பெட்ரிசியா லாசாரா பெகோ குவேரா அவர்கள்!

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள முதலாவது கியூபா தேசத்தின் தூதுவர் என்ற வகையில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும், இந்தப் பயணம் வடக்கு மாகாணத்துக்கும் கியூபாவுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும் இலங்கைக்கான கியூபக் குடியரசின் தூதுவர் மேன்மைதங்கிய பெட்ரிசியா லாசாரா பெகோ குவேரா தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இலங்கைக்கான கியூபா குடியரசின் தூதுவர் மேன்மைதங்கிய திருமதி பெட்ரிசியா லாசாரா பெகோ குவேராவுக்கும் இடையிலான சந்திப்பு 14ம் திகதி அன்று புதன்கிழமை மாலை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கியூபத் தூதுவர், வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் முதலாவது கியூபத் தூதுவர் என்ற வகையில் தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். இந்தப் பயணம் வடக்கு மாகாணத்துடனான கியூபாவின் உறவுகளை வளர்ப்பதற்கான புதிய வாசலைத் திறந்துள்ளதாகவும் தெரிவித்தார். இலங்கையின் முக்கிய மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் விளங்குவதாகக் குறிப்பிட்ட அவர், கியூபாவின் முக்கிய தலைவரான பிடல் காஸ்ட்ரோவின் 100ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளதாகத் தெரிவித்தார்.



இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன், பிடல் காஸ்ட்ரோ மற்றும் கியூபா தொடர்பில் தாம் பல விடயங்களை அறிந்துள்ளதாகக் குறிப்பிட்டதுடன், முதல் தடவையாக வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள தூதுவரை வடக்கு மாகாண மக்கள் சார்பில் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளங்கள், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இச்சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# உக்ரைனதேசம் – ஒரு முக்கியமான புவிசார் அரசியல் திருப்புமுனையில்!

## ஸ்டார்ஷீல்ட் கட்டுப்பாடுகள், அமெரிக்க உளவுத்துறை ஒத்துழைப்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மை, பிரிட்டனின் இராணுவ ஆதரவு மற்றும் ரஷ்யா-ஜப்பான் இடையே உருவாகும் புதிய இராஜதந்திர நெருக்கடி

### சர்வதேச புவிசார் அரசியல் ஆய்வுக் கட்டுரை 14 அக்டோபர் 2026




ரஷ்யா-உக்ரைன் போர் மற்றுமொரு முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. செயற்கைக்கோள் தொடர்பாடல், உளவுத்துறை ஒத்துழைப்பு மற்றும் மேற்கத்திய நாடுகளின் அரசியல் முடிவுகள் ஆகியவை போர்க்களத்தின் நிலைமையைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக மாறியுள்ளன.

2026 அக்டோபர் 13-14 இரவு, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் இராணுவப் பயன்பாட்டுக்கான செயற்கைக்கோள் தொடர்பாடல் சேவையான ஸ்டார்ஷீல்டில் கட்டுப்பாடுகள் ஏற்பட்டதாக உக்ரைனிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. மணிக்கு சுமார் 160 கிலோமீட்டருக்கும் அதிகமான வேகத்தில் இயங்கும் ஆளில்லா விமானங்களில் தொடர்பாடல் துண்டிக்கப்பட்டதாகவும், இதனால் சில இராணுவ நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

உக்ரைனிய தன்னார்வலரும் இராணுவத்திற்கான ஆளில்லா விமானங்களை வழங்கும் அமைப்பின் நிறுவனருமான செர்ஹி ஸ்டெர்னென்கோ, இந்தக் கட்டுப்பாடுகள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் நிர்வாகத்தின் கோரிக்கையைத் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகளை யார் உத்தரவிட்டார்கள் அல்லது அவற்றுக்கான உண்மையான காரணம் என்ன என்பது இதுவரை சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இந்தச் சம்பவம் உக்ரைன் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தின் மீது கொண்டுள்ள சார்புநிலையை வெளிப்படுத்துகிறது. ஆளில்லா விமானங்களைக் கட்டுப்படுத்துதல், எதிரியின் நகர்வுகளைக் கண்காணித்தல், போர்க்களத் தகவல்களைப் பரிமாறுதல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றுக்கு நம்பகமான தொடர்பாடல் அவசியமாகும்.

முக்கியமான கேள்வி என்னவென்றால், வெளிநாட்டு அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும் எடுக்கும் முடிவுகளால் பாதிக்கப்படக்கூடிய தொழில்நுட்பத்தைச் சார்ந்திருக்கும் நிலையில், உக்ரைன் தனது இராணுவத் தொடர்பாடலை எவ்வாறு தடையின்றிப் பேணப்போகிறது என்பதேயாகும்.

வாஷிங்டன்-கீவ் உறவுகள்: உளவுத்துறை ஒத்துழைப்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மை

செயற்கைக்கோள் தொடர்பாடல் விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அதேவேளையில், ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்கள் குறித்த முன்னெச்சரிக்கைத் தகவல்கள் தொடர்பாகவும் உக்ரைன் கவலை வெளியிட்டுள்ளது.

கீவ் நகரின் மீது நடத்தப்பட்ட ரஷ்யாவின் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதலுக்கு முன்னதாக போதுமான எச்சரிக்கை கிடைக்கவில்லை என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தெரிவித்துள்ளார். தாக்குதல் நிகழ்வதற்குச் சில விநாடிகளுக்கு முன்னரே உக்ரைனியப் படைகள் அதைக் கண்டறிந்ததாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, வெளிநாட்டுப் பங்காளிகளிடமிருந்து கிடைத்த உளவுத்துறைத் தகவல்கள் உக்ரைனின் வான் பாதுகாப்பை வலுப்படுத்த உதவியதாகக் குறிப்பிட்ட செலென்ஸ்கி, இராணுவ மற்றும் உளவுத்துறை அமைப்புகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துமாறு வலியுறுத்தினார்.

இதற்கிடையில், அமெரிக்கா உக்ரைனுடனான உளவுத்துறைத் தகவல் பகிர்வை நிறுத்திவிட்டதாக வெளியான கருத்துகளை டிரம்ப் மறுத்துள்ளார்.

எனினும், ஒரு குறிப்பிட்ட தாக்குதலுக்கு முன்னெச்சரிக்கைத் தகவல் தாமதமாகக் கிடைத்தது என்பதற்காக அமெரிக்காவின் அனைத்து உளவுத்துறை ஒத்துழைப்பும் நிறுத்தப்பட்டுவிட்டது என்று முடிவெடுக்க முடியாது. தற்போதைய தகவல்கள் அத்தகைய முடிவை உறுதிப்படுத்தவில்லை.

இருப்பினும், உளவுத்துறை மற்றும் தொடர்பாடல் சேவைகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மை உக்ரைனின் இராணுவத் திட்டமிடலைப் பாதிக்கக்கூடும்.

ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீதான உக்ரைனின் தாக்குதல்கள் தொடர்பாகவும் வாஷிங்டனுக்கும் கீவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எரிபொருள் விநியோகம் மற்றும் உலகளாவிய பொருளாதார விளைவுகள் குறித்த கவலைகளும் இந்த விவாதங்களில் இடம்பெறுகின்றன.

ஆனால், இந்த அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கும் ஸ்டார்ஷீல்ட் கட்டுப்பாடுகளுக்கும் நேரடியான தொடர்பு இருப்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

உக்ரைனின் உடனடி இராணுவத் தேவைகளுக்கும் அதன் முக்கிய மேற்கத்திய ஆதரவாளர்களின் அரசியல் முன்னுரிமைகளுக்கும் இடையே உருவாகக்கூடிய இடைவெளியைச் சமாளிப்பதே கீவ் எதிர்கொள்ளும் முக்கிய சவாலாகும்.

எரிசக்திப் போர்நிறுத்தம்: இராஜதந்திர அறிவிப்புகளுக்கும் கள யதார்த்தத்திற்கும் இடையிலான இடைவெளி

உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்கான முன்மொழியப்பட்ட போர்நிறுத்தம் மற்றுமொரு முக்கியமான சர்ச்சையாக உருவெடுத்துள்ளது.

குளிர்காலம் நெருங்கிவரும் நிலையில், மின்சார உற்பத்தி நிலையங்கள், வெப்பமூட்டும் அமைப்புகள், எரிவாயு வசதிகள் மற்றும் மின்விநியோகக் கட்டமைப்புகள் மீதான ரஷ்யத் தாக்குதல்கள் உக்ரைனுக்கு மிகப்பெரிய சவாலாக அமைந்துள்ளன.

இத்தகைய தாக்குதல்கள் மின்சார விநியோகத்தை மட்டுமல்லாமல் மருத்துவமனைகள், குடிநீர் விநியோகம், போக்குவரத்து, தொழிற்துறை மற்றும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையையும் பாதிக்கக்கூடும்.

பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் எட் மிலிபாண்ட், ரஷ்யா ஒரே வாரத்தில் உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது 200 தாக்குதல்களை நடத்தியதாகக் குறிப்பிட்டு, விரிவான எரிசக்திப் போர்நிறுத்தம் ஒன்றை வலியுறுத்தியுள்ளார்.

மாஸ்கோவின் மீதான அழுத்தத்தைக் குறைக்காமல், மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மறுபுறம், முன்மொழியப்பட்ட எரிசக்திப் போர்நிறுத்தத்தின் வரம்புகள் இன்னும் தெளிவாக வரையறுக்கப்படவில்லை என்று கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

இங்கு அடிப்படையான பிரச்சினை என்னவென்றால், போர்நிறுத்தம் ஒன்றை அறிவிப்பது மட்டுமே அதை நடைமுறைப்படுத்துவதற்குப் போதுமானதல்ல.

நம்பகமான ஒப்பந்தம் உருவாக வேண்டுமானால், பாதுகாக்கப்பட வேண்டிய உள்கட்டமைப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். இரு தரப்பினரின் கடமைகள் குறிப்பிடப்பட வேண்டும். மீறல்கள் சுயாதீனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தை மீறுபவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட வேண்டும்.

எரிசக்திப் போர்நிறுத்தத்தின் உண்மையான வெற்றி இராஜதந்திர அறிவிப்புகளில் இல்லை பொதுமக்களும் அத்தியாவசிய உள்கட்டமைப்புகளும் உண்மையில் பாதுகாக்கப்படுகிறார்களா என்பதிலேயே உள்ளது.

பிரிட்டனின் இராணுவ ஆதரவு: உக்ரைனின் வான் பாதுகாப்பை வலுப்படுத்தும் முயற்சி

உக்ரைனின் வான் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் ரஷ்யாவுக்கு எதிரான சர்வதேச அழுத்தத்தைத் தொடர்ந்து பேணுவதற்கும் பிரிட்டன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

2026 அக்டோபர் 14 அன்று செலென்ஸ்கி லண்டனுக்கு வருகை தருவதற்கு முன்னதாக, உக்ரைனுக்கு 45 மில்லியன் பவுண்ட் மதிப்பிலான தரையிலிருந்து வானிலுள்ள இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளை வழங்குவதாகப் பிரிட்டன் அறிவித்ததாக வழங்கப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் 10 மில்லியன் பவுண்ட் மதிப்பிலான உதவி விரைவுபடுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நான்கு ஆண்டுகளில் 5,000-க்கும் அதிகமான இலகுரக பல்நோக்கு ஏவுகணைகளை வழங்குவதற்கான 1.6 பில்லியன் பவுண்ட் மதிப்பிலான விரிவான திட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவுக்கு எதிரான கூடுதல் தடைகளை விதிப்பது மற்றும் ரஷ்யாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கு உதவும் கடல்சார் சேவைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் லண்டன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

உக்ரைனின் ஆதரவாளர்கள் சோர்வடைவதாலோ அல்லது அரசியல் ரீதியாகப் பிளவுபடுவதாலோ ரஷ்யா தனது போர் இலக்குகளை அடைய அனுமதிக்கக் கூடாது என்பதே மிலிபாண்டின் நிலைப்பாடாகும்.

குளிர்காலத்திற்கு முன்னதாக உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கும் சூழலில், வான் பாதுகாப்பு ஏவுகணைகளின் விநியோகம் முக்கியத்துவம் பெறுகிறது.

எனினும், அறிவிக்கப்பட்ட உதவிகள் எவ்வளவு விரைவாக உக்ரைனைச் சென்றடைகின்றன, தேவையான ஆயுதங்கள் தொடர்ந்து கிடைக்கின்றனவா, நேட்டோ நாடுகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு எவ்வாறு அமைகிறது என்பனவற்றைப் பொறுத்தே இந்த முயற்சிகளின் நடைமுறைப் பயன் தீர்மானிக்கப்படும்.

அரசியல் உறுதிமொழிகளை உக்ரைனின் பாதுகாப்பை வலுப்படுத்தும் நடைமுறை உதவிகளாக மாற்றுவதே பிரிட்டனும் அதன் ஐரோப்பியப் பங்காளிகளும் எதிர்கொள்ளும் முக்கியப் பொறுப்பாகும்.

கிரெம்ளினின் நிலைப்பாடு: அரசியல் தெளிவின்மையும் சமாதானப் பேச்சுவார்த்தைகளும்

அமெரிக்காவின் உளவுத்துறை ஒத்துழைப்பிலும் செயற்கைக்கோள் தொடர்பாடல் சேவைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்ற தகவல்களுக்கு கிரெம்ளின் எச்சரிக்கையுடன் பதிலளித்துள்ளது.

ஸ்டார்லிங்க் தொடர்பான கட்டுப்பாடுகள் குறித்து ஊடகச் செய்திகளைத் தவிர தங்களிடம் மேலதிகத் தகவல்கள் இல்லை என்று ரஷ்ய ஜனாதிபதியின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார். அமெரிக்க உதவி தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் வெளியாகும் நிலையில், அவசரமாக முடிவுகளை எடுக்க வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய அமெரிக்க சமாதான முன்மொழிவுகள் குறித்த செய்திகளை ஊகங்களாகக் குறிப்பிட்ட அவர், பேச்சுவார்த்தைகள் இரகசியமாக முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகள் போரை நீடிக்க முயற்சிப்பதாகவும், ஐரோப்பாவில் முடக்கப்பட்டுள்ள ரஷ்ய அரசுச் சொத்துகள் தொடர்பான நடவடிக்கைகள் மாஸ்கோவின் நலன்களைப் பாதிக்கக்கூடும் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் வாதம் இதற்கு மாறானதாக உள்ளது. நம்பகமான பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் ரஷ்யா மீதான அழுத்தத்தைக் குறைப்பது எதிர்காலத்தில் மேலும் ஆக்கிரமிப்புகளுக்கு வழிவகுக்கலாம் என்று அவை கருதுகின்றன.

(தொடர்ச்சி 17 பக்கம்)

# நவிப்பிள்ளை அம்மையாரை எவ்வாறு நாம் விளங்கிக்கொண்டு பயணிப்பது?



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

**நோபல் பரிசை பெற்றதால் இப்பொழுது நவிப்பிள்ளை அம்மையாருடைய அந்தஸ்து, அங்கீகாரம் உலக அளவில் அதிகரித்திருக்கிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஈழத்தில் இடம்பெற்றது இன அழிப்புத்தான் என்று கூறுவாராக இருந்தால் அது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும். அவர் ஏன் இதுவரையிலும் அப்படிச் சொல்லவில்லை என்று கேட்டு அவரை நிந்திப்பதை விடவும், விமர்சிப்பதை விடவும், அவரை இப்பொழுதாவது அவ்வாறு சொல்ல வைக்கலாமா என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். உலகப் பரப்பில் உயர்ந்து நிற்கும் ஒரு தமிழ்ப் பெண்ணை நீதிக்கான தமது போராட்டத்தில் எப்படிப் பங்காளி ஆக்குவது என்றுதான் தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும். அதுதான் ஓர் அரசைப் போல சிந்திப்பது.**

பிரான்ஸைச் சேர்ந்த ஹென்றி பி.ககன் இந்த ஆண்டு வேதியல் துறைக்கான நோபல் பரிசை வென்றுள்ளார். சிறுவயதில் நாஜிகளிடமிருந்து ஒழிந்து வாழ்ந்தவர். இன அழிப்பில் இருந்து தப்பியவர். இன்று தனது 95ஆவது வயதில் நோபல் பரிசை வென்றிருக்கிறார்.

இன அழிப்பில் இருந்து தப்பிய ஒருவர் வேதியலுக்கான நோபல் பரிசை வென்றிருக்கும் இதே ஆண்டில், இன அழிப்புக்கு எதிரான துணிகரமான சட்ட நடவடிக்கைகளுக்காக நவிப்பிள்ளை அம்மையாருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

அவருக்கு நோபல் பரிசு கிடைத்த பின், ஈழத் தமிழ் இன அழிப்பு தொடர்பான அம்மையாரின் நிலைப்பாடு மீண்டும் வாதப் பொருளாகியிருக்கிறது. நாலாம் கட்ட ஈழப்போரின் போது நவிப்பிள்ளை அம்மையார் ஐநா மனித உரிமைகள் ஆணையாளராக இருந்தார். மே 18க்குப் பின் அப்பொழுது ஐநா செயலராக இருந்த பான்கீ மூன் வன்னி கிழக்கின் மீது ஹெலிகாப்டரில் பறந்தபடி இறுதிக்கட்டப் போருக்கு பின்னரான போர்க்களக் காட்சிகளைப் பார்த்த போது, நவிப்பிள்ளை அம்மையார் பொறுப்பில் இருந்தார்.



ஐநா மனித உரிமைகள் ஆணையாளராக அவர் 2013ல் இலங்கைக்கு வருகை தந்தார். அவருடைய தமிழ் அடையாளம் காரணமாக அப்பொழுது அமைச்சராக இருந்த மேர்வின் டி சில்வா அவரை அவமதித்தார். அவருக்கு ஒரு திருமணம் செய்து வைக்கப்போவதாகவும் கூறினார்.

தமிழ்ப் பகுதிகளில் அம்மையார் பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டார், கதைத்தார். எனினும் நடந்தது இன அழிப்பு என்று சொல்லவில்லை. அதற்குப் பின்னரும் சொல்லவில்லை. இன்றுவரையிலும் அவர் இலங்கைத் தீவில் இடம்பெற்றது இன அழிப்பு என்று சொல்லவில்லை. ஏன் அவ்வாறு கூறவில்லை?

ஏனென்றால், நடந்தது இன அழிப்பு என்பதனை சட்ட ரீதியாக நிரூபிக்க வேண்டும் என்று அவர் கூறுவதுதான் காரணமா? அல்லது அவர் இன அழிப்புதான் நடந்தது என்று நன்கு தெரிந்த பின்னரும் அதைக் கூறாமல் விடுவதற்காக வேறு சட்டரீதியான காரணங்களை கூறுகிறாரா?

தென்னாபிரிக்காவில் தொடங்கி ஆபிரிக்கா மற்றும் பலஸ்தீனம் வரையிலும் இன அழிப்புக் களங்களை நேரடியாகத் தரிசித்தவர் அவர். அது தொடர்பான நீதி விசாரணைப் பொறிமுறைகளில் நேரடியாகப் பங்கேற்றவர். இலங்கையில் நடந்தது இன அழிப்பா இல்லையா என்பதனை உணரத் தேவையான எல்லாத் தகமையும் அறிவும் முதிர்ச்சியும் அவருக்கு உண்டு. இலங்கையில் இடம் பெற்றது இன அழிப்பு என்பது அவருக்கு நன்கு விளங்கும்.ஆனால் அவர் அதை வெளிப்படையாகக் கூறத் தயாரில்லை. ஏன்?

ஏனென்றால், அவர் அப்பொழுது பதவிப் பொறுப்பில் இருந்த ஓர் உலகளாவிய ராஜதந்திரி. ராஜதந்திரிகள் தேவதைகள் அல்ல. தாங்கள் சார்ந்த நாட்டின் அல்லது உலகப் பொது அமைப்பின் ராணுவப் பொருளாதார, அரசியல், ராஜதந்திர இலக்குகளை நிறைவேற்றும் ஆணையைப் பெற்ற ராஜதந்திரிகள் தான். நவிப்பிள்ளை அம்மையாரும் ஒரு ராஜதந்திரிதான். தேவதை அல்ல.

பொறுப்புகளில் இருக்கும்போது அவர் அதை அவ்வாறு கூறமுடியாத ஒரு நிலைமை இருந்திருக்கலாம். குறிப்பாக ஐநாவில் அவர் மனித உரிமைகள் ஆணையாளராக இருந்தபோது அதனை அவர் அவ்வாறு உத்தியோகபூர்வமாக கூறுவதற்கு அவருடைய பதவி அவரை அனுமதிக்காமல் இருந்திருக்கலாம். ஏனெனில் ஐநா இன்றுவரையிலும் இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்று கூறவில்லை. இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்று கூறுவதற்கு ஏன் ஐநா தயாரில்லை?

ஏனென்றால், ஐநாவை முகாமை செய்யும் நாடுகள், உலக அளவிலும் பிராந்திய அளவிலும் பலமிக்க நாடுகள், நடந்தது இன அழிப்பு என்பதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கக்கூடாது என்று ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்திருக்கின்றன என்பதுதான் உண்மை. போர்குற்றம், மனிதகுலத்துக்கு எதிரான குற்றம் என்ற வரையறைக்குள் மட்டுமே இலங்கை விவகாரத்தை அணுக வேண்டும் என்பது ஓர் அரசியல் தீர்மானம். இலங்கைத் தீவில் இடம்பெற்றது மனித உரிமை மீறல்கள் அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றச்செயல்கள் என்று கூறுவதன்மூலம் போரில் ஈடுபட்ட இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் ஓர் அரசியல் தீர்மானம். இன அழிப்பு என்பதை நிரூபிக்கத் தேவையான பரந்துபட்ட, சக்திமிக்க ஒரு விசாரணைப் பொறிமுறையை இன்றுவரை உருவாக்காமல் இருப்பதும் ஓர் அரசியல் தீர்மானம். 2021ஆம் ஆண்டு சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தை (OSLAP) மட்டுப்படுத்தப்பட்ட ஆணையைக் கொண்ட மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டியதும் ஓர் அரசியல் தீர்மானம்.

இந்துமகா சமுத்திரத்தில் இலங்கைத் தீவை எவ்வாறு கையாள வேண்டும்? இனப்பிரச்சினையை எவ்வாறு கையாள வேண்டும்? அதை எங்கே கொண்டு போய், எந்தச் சட்டகத்துக்குள் வைக்க வேண்டும்? என்பவை எல்லாம் அரசியல் தீர்மானங்கள். ஐநாவில் அதை மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்ட வேண்டும் என்பது ஓர் அரசியல் தீர்மானம்.

அதனால், ஐநாவின் அரசியல் தீர்மானங்களை ஓர் ஐநா ஆணையாளராக நவிப்பிள்ளை பின்பற்றினார். ஐநாவில் அவர் பொறுப்பில் இருந்த காலகட்டங்களில் இன அழிப்பு என்று அவர் சொல்லாமல் விட்டது அவருடைய தனிப்பட்ட விருப்பம் என்பதை விடவும் ஐநாவின் அரசியல் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

அவர் பதவியில் இருந்த காலத்திலும் அதுதான் ஐநாவின் முடிவு. இப்பொழுதும் அதுதான் ஐநாவின் முடிவு. அதாவது ஐநா ஈழத் தமிழர்களுக்கு வழங்கக்கூடிய நீதியின் வரையறை அது. அம்மையார் கூறுவதுபோல இன அழிப்பை நிரூபிக்கத் தேவையான விசாரணைப் பொறிமுறைகளை யார் உருவாக்குவது? எப்படி உருவாக்குவது? அதில் ஐநாவுக்கு உள்ள பங்கு என்ன? மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கும்வரை அவ்வாறான ஒரு விசாரணைப் பொறிமுறை சாத்தியமா?

ஆனால் தனக்குரிய உலக மன்றப் பொறுப்புகளில் இருந்து நீங்கிய பின், இன அழிப்பு தொடர்பான உலகளாவிய நீதி விசாரணைப் பொறிமுறைகளில் அவர் வகித்த பதவிகளில் இருந்து நீங்கிய பின்னரான காலகட்டத்திலும்கூட இன்றுவரையிலும், அவர் இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு என்று சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை? இந்தக் கேள்வியைத்தான் ஒரு தார்மீகக் கேள்வியாக ஈழத் தமிழர்கள் அம்மையாரிடம் கேட்க வேண்டும்.

தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா அவருக்குப் பொறுப்புகளை வழங்கியது அவர் ஒரு தமிழ்ப் பெண் என்பதற்காக அல்ல. தொழில்சார் தகமைகள் காரணமாகத்தான்இன அழிப்புக்கு எதிரான விசாரணைப் பொறிமுறைகளில் அவருக்கு இருந்த முதிர்ச்சி காரணமாகத்தான். தென்னாபிரிக்காவில் இருந்து பாலஸ்தீனம் வரையிலும் அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் அவர் தமிழர் என்பதற்காக வழங்கப்படவில்லை. அவருடைய சேவை மூப்பு,சட்டச் செயற்பாடு போன்றவற்றிற்காக வழங்கப்பட்டன. அப்படித்தான் நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது அவர் தமிழர் என்பதற்காக அல்ல. ஆனால் நோபல் பரிசு வென்ற முதலாவது தமிழ்ப் பெண் என்று அடிப்படையில், ஈழத் தமிழர்கள் அவரிடம் கேட்கலாம். இப்பொழுதாவது நடந்தது இன அழிப்பு என்று சொல்லுவீர்களா? அல்லது ஒரு கெட்டிக்கார சட்டத்தரணிபோல சட்டரீதியாக அதை நிரூபிக்க வேண்டும் என்று கூறுவீர்களா? என்று கேட்கலாம்.

நோபல் பரிசை பெற்றதால் இப்பொழுது அவருடைய அந்தஸ்து, அங்கீகாரம் உலக அளவில் அதிகரித்திருக்கிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஈழத்தில் இடம்பெற்றது இன அழிப்புத்தான் என்று கூறுவாராக இருந்தால் அது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும். அவர் ஏன் இதுவரையிலும் அப்படிச் சொல்லவில்லை என்று கேட்டு அவரை நிந்திப்பதை விடவும், விமர்சிப்பதை விடவும், அவரை இப்பொழுதாவது அவ்வாறு சொல்ல வைக்கலாமா என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். உலகப் பரப்பில் உயர்ந்து நிற்கும் ஒரு தமிழ்ப் பெண்ணை நீதிக்கான தமது போராட்டத்தில் எப்படிப் பங்காளி ஆக்குவது என்றுதான் தமிழ்மக்கள் சிந்திக்க வேண்டும். அதுதான் ஓர் அரசைப் போல சிந்திப்பது.

இங்கு இஸ்ரேலிய உதாரணத்தைச் சுட்டிக்காட்டலாம். பலஸ்தீனத்தில் யூதர்களின் தாயகத்தை அங்கீகரிக்குமாறு இந்தியாவிடம் ஆதரவு கேட்டு ஐன்ஸ்டீன் 1947ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். நேரு அந்தக் கோரிக்கையை அப்பொழுது நிராகரித்து விட்டார். எனினும் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியாக திகழ்ந்த யூதரான ஐன்ஸ்டீன் எழுதிய கடிதத்திற்கு அந்த நேரத்தில் ஒரு பெறுமதி இருந்தது.

அப்படித்தான் நவிப்பிள்ளை அம்மையார் இப்பொழுது நோபல் பரிசு வென்றிருக்கும் ஒரு பின்னணியில் ஈழத் தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறுவாராக இருந்தால், அல்லது அதற்கு வேண்டிய சுயாதீனமான விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு உலக சமூகத்தைத் தூண்டுவாராக இருந்தால், அது நீதிக்கான ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் ஒரு முக்கிய அடைவாகக் கருதப்படும்.

எனவே இந்த இடத்தில் அவர் ராஜதந்திரியாக இருந்த பொழுது என்னென்ன சொன்னார், யாருக்கு எதிராகச் சொன்னார், என்ற விவாதங்களில் ஈடுபடுவதை விடவும் ஓர் ஓய்வு பெற்ற ராஜதந்திரியாக, நோபல் பரிசை வென்ற முதல் தமிழ்ப் பெண்ணாக, அவரை எப்படி நீதிக்கான போராட்டத்தின் பங்காளி ஆக்கலாம் என்றுதான் ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் மத்தியில் நீதிபதிகளாக இருந்தவர்கள் குறிப்பாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தன்னுள் கொண்டிருக்கும் ஒரு நீதி பரிபாலனக் கட்டமைப்புக்குள் நீதிபதிகளாக இருந்தவர்கள், ஓய்வு பெற்றபின் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் வருக்கிறார்கள். உதாரணம் விக்னேஷ்வரன். அவர்கள் பதவிப் பொறுப்புகளில் இருந்தவரை அதாவது நீதிபதிகளாக இருந்தவரை அவர்கள் அரசியலில் என்ன கதைக்கலாம்செய்யலாம் என்பதில் அடிப்படையான வரையறைகள் இருந்தன.

அப்படித்தான் இப்பொழுது கனடாவில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் உண்டு. பிரித்தானியாவில் ஒரு பெண் அமைச்சர் உண்டு. நோர்வேயில் ஒரு பெண் அமைச்சர் உண்டு. இவர்கள் எல்லாரும் தாங்கள் தமிழர்கள் என்பதற்காக, தமிழ்த் தேசிய அரசியலைக் குறித்து தன்னிச்சையாக முடிவுகளை எடுக்க முடியுமா? கனடாவில் இப்பொழுது அமைச்சராக இருக்கும் ஹரி ஆனந்தசங்கரி கனடாவின் வெளியுறவுக் கொள்கைத் தீர்மானங்களை மீறி ஈழத் தமிழர்கள் தொடர்பாக முடிவுகளை எடுக்க முடியுமா? லண்டனில் உமா குமரன் அவ்வாறு முடிவெடுக்க முடியுமா? நோர்வேயில் ஹம்சாஜினி அவ்வாறு முடிவெடுக்க முடியுமா? இல்லை. அவர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் கொள்கைகளைத்தான் பிரதிபலிக்கலாம் நடைமுறைப்படுத்தலாம். தமிழர்களாக மட்டும் முடிவெடுக்க முடியாது. அவர்கள் எந்த அரசாங்கத்தின் ஆணைக்கு உட்பட்டு இயங்குகிறார்களோ அதன் வெளியுறவுத் தீர்மானங்களைதத்தான் பிரதிபலிப்பார்கள். தமிழர்களின் இன உணர்வை முழுமையாகப் பிரதிபலிக்க முடியாது. இது நவிப்பிள்ளை அம்மையாருக்கும் பொருந்தும்.

எனவே பதவிப் பொறுப்பில் இருந்தவரை அவர் உத்தியோகபூர்வமாக தெரிவித்த கருத்துக்களைக் குறித்து தமிழ் மக்கள் உணர்ச்சி வசப்படத் தேவையில்லை. அதற்காக அவரைப் பகைவரை நோக்கித் தள்ளத் தேவையில்லை. மாறாக ஓர் அரசைப்போல சிந்தித்து அவரை எப்படி இன அழிப்புக்கு எதிரான நீதிக்கான போராட்டத்தில் பங்காளி ஆக்கலாம் என்றுதான் சிந்திக்க வேண்டும் செயற்பட வேண்டும்.

# கடும் குற்றங்கள் புரிந்தவரான ஞானசார தேரரைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் செய்யும் பிக்குகள் நீதிக்கு எதிரானவர்களா?

### ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்ட பிக்குகளின் வரம்பு மீறும் போக்கு!





சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கோரியும், பௌத்த தேரர்களின் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறு வலியுறுத்தியும் பௌத்த தேரர்களால் முன்னெடுக்கப்பட்ட நடைபேரணி, கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலக வளாகத்தை 14ம் திகதி மாலை வந்தடைந்தது.

இந்த நடைபேரணி காரணமாக காலிமுகத்திடல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டதுடன், பாதுகாப்புக்காக அதிகளவிலான பொலிஸாரும் ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.
ஜனாதிபதியையும் ஜனாதிபதி செயலாளரையும் நேரில் சந்தித்துத் தமது கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காகத் தேரர்கள் ஜனாதிபதி செயலக வளாகத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அங்கு வந்த ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க, தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அப்போது, அவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு அரசுக்குக் கூடுதல் அவகாசம் தேவைப்படும் என ஜனாதிபதி செயலாளர் தெரிவித்தார். இருப்பினும், ஒரு முடிவை எடுப்பதற்கான குறிப்பிட்ட காலக்கெடு குறித்து உடன்பாடு எட்டப்படாமல் இந்த பேச்சு நிறைவடைந்ததால், பிக்குகள் தமது போராட்டத்தை கொட்டும் மழைக்கு மத்தியில் தொடர்ந்து முன்னெடுத்தனர்.

இதனிடையே, காலி வீதியில் போராட்டக்காரர்கள் தற்காலிகக் கூடாரமொன்றை அமைத்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்துக்கு வெளியே பதற்றம் நிலவியது. அக்கூடாரத்தை உடனடியாக அகற்றுமாறு பொலிஸார் அறிவுறுத்திய போதிலும் பிக்குகள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

இதையடுத்து, பொலிஸார் பலவந்தமாகக் கூடாரத்தை அகற்றியமையுடன், அங்கிருந்த பிக்கு ஒருவரையும் கைது செய்தனர். இதனால் கோபமடைந்த பிக்குகள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் அங்கு பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாகக் கொழும்பு - காலி முகத்திடல் வீதியில் போக்குவரத்து கடுமையா-கப் பாதிக்கப்பட்டுத் தடைப்பட்டது. ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கலகத் தடுப்புப் பொ-லிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில், பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினாலோ அல்லது சட்டத்தை மீறினாலோ கைது செய்யப்படுவீர்கள் எனப் போராட்டத்தில் ஈடுபடும் பிக்குகளுக்குப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிக்குகளும், அவர்களின் ஆதரவாளர்களும் பொலிஸாரின் வேண்டுகோளை ஏற்று காலி வீதியின் எதிர்ப்பக்க நடைபாதைக்குத் தமது போராட்டத்தை மாற்றினர்.

இதனையடுத்து, காலி வீதியின் போக்குவரத்து மீண்டும் முழுமையாகச் சுமுக நிலைக்குத் திரும்பியது. குறைந்த எண்ணிக்கையிலான போராட்டக்காரர்களுடன் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு-னவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரசன்ன ரணவீர, சஞ்சீவ எதிரிமான்ன, இந்திக அனுருத்த மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

# பிரம்ரன் மேயராக மீண்டும் தெரிவு செய்யப்பெறுவார் என்ற நம்பிக்கையோடு பெற்றிக் பிரவுண் அவர்களை வாழ்த்துவதற்காக பிரம்ரன் ஸ்ரீ சபரி பீடத்தில் கூடிய அடியார்கள்!





மக்கள் ஆதரவோடு மயசசனை தொகுதியின் கனடிய பாராளுமன்ற உறுப்பினராக நீண்ட காலம் பதவி வகித்த "தமிழ் மக்களின் நண்பன்" என்று அன்பாக நேசிக்கப்பெறும் பெற்றிக் பிரவுண் அவர்கள் பிரம்ரன் நகரின் மேயராக தேர்ந்தெடுக்கப்பெற்ற நாள் தொடக்கம் பிரம்ரன் நகர மக்களுக்கும் அதேபோன்று தமிழ் மக்களுக்கும் ஆதரவாக இருக்க வேண்டும் என்பதை பல வழிக-ளில் நிரூபித்து வருகின்றார்.
அவ்வாறாக மக்கள் ஆதரவோடு மீண்டும் தெரிவு செய்யப்பெறுவார் என்ற நம்பிக்கையோடு தற்போதைய மேயராக விளங்கும் பெற்றிக் பிரவுண் அவர்களை வாழ்த்துவதற்காக **470 Chrysler Dr Unit 9-10, Brampton** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "பிரம்ரன் ஸ்ரீ சபரி பீடத்தில்" கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கூடிய ஐயப்பன் அடியார்கள் பீடத்தின் தர்மகர்த்தா அருண் கணேசன் குருசாமி அவர்கள் தலைமையில் அங்கு வருகை தந்த பெற்றிக் பிரவுண்" அவர்களை வரவேற்றார்கள்.
அதன் பின்னர் நடைபெற்ற விசேட பூசை மற்றும் அபிஷேகங்களிலும் அவர் பங்கெடுத்தார். அத்துடன் அங்கு கூடியிருந்த ஐயப்ப பக்தர்கள் மத்தியில் உரையாற்றிய போது கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு என்னால் எவ்வளவு சேவையாற்றக் கூடியதாக இருந்ததோ, அந்தளவிற்கும் அதிகமாக இனிவரும் காலங்களில் சேவையாற்றக் காத்திருக்கின்றேன் என்று தெரிவித்தார்.
அங்கு உரையாற்றிய உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அவர்கள் "மீண்டும் பிரம்ரன் மாநகரின் மன்னராக எமது பெற்றிக் பிரவுண் அவர்கள் தெரிவு செய்யப்பெறும் நாளுக்காக காத்திருந்து அன்றைய தினம் நடைபெறவுள்ள "வெற்றிக் கொண்டாட்டத்திலும் நாம் கலந்து கொள்வோம் என்ற நம்பிக்கை தரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.!
அங்கு உரையாற்றிய குருசாமி அருண் கணேசன் அவர்களின் துணைவியார் மற்றும் புதல்வி ஆகியோர் முறையே ஆங்கிலத்திலும் பிரன்ச் மொழியிலும் தங்கள் ஆதரவு தரும் வார்த்தைகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.





கனடிய செய்திகள் Canadian News

# "நாற்பது வருட கால இடப்பெயர்வு மற்றும் புலம் பெயர்வு ஆகியவற்றுக்குப்பின்னர் ஈழத் தமிழர்கள் தற்போது பல நாடுகளிலும் தங்களை மீளக் கட்டியெழுப்பி வர்த்தகத்திலும் கல்வியிலும் பொருளாரத்திலும் அறிவிலும் ஆற்றலில் உயர்ந்து நிற்கின்றனர்"

## "அனைத்துலக தமிழர் பேரவை" நடத்தும் "உலகத் தமிழ் ஆய்வு மாநாடு-2026" 15ம் திகதி வியாழக்கிழமை அன்று கனடா-ஸ்காபுறோவில் கோலாகலமாக ஆரம்பமாகியபோது அமைப்பின் தலைவர் நிமால் விநாயகமூர்த்தி தனது உரையில் தெரிவிப்பு

**- ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்திலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்**

**கனடாவைத் தலைமையகமாகக் கொண்ட "அனைத்துலக தமிழர் பேரவை" நடத்தும் "உலகத் தமிழ் ஆய்வு மாநாடு-2026" 15ம் திகதி வியாழக்கிழமை காலை தமிழர்களின் பண்பாட்டுக் கோலங்களாக விளங்கு பறை மற்றும் மேளம் வாத்தியங்கள் முழங்க கனடா- ஸ்காபுறோவில் கோலாகலமாக ஆரம்பமாகியது!**

-------------------------------------









கனடாவைத் தலைமையகமாகக் கொண்டதும் உலகின் பல நாடுகளிலும் கிளைகளை கொண்டதுமான "அனைத்துலக தமிழர் பேரவை" ஏற்பாட்டில் நடைபெறும் "உலகத் தமிழ் ஆய்வு மாநாடு-2026" 15-10-2026 அன்று வியாழக்கிழமை காலை கனடா-ஸ்காபுறோவில் உள்ள சென்றானியல் உயர் கலலூரி வளாக விழா மண்டபத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியது!

விழாவின் ஆரம்ப பகுதியை திரு குயின்றஸ் துரைசிங்கம் ஆங்கிலத்திலும் தமிழிலும் நேர்த்தியாகத் தொகுத்து வழங்கினார்.

















அங்கு தலைமை உரையாற்றிய "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் தலைவரும் விழாக்குழுத் தலைவருமான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் மிகவும் காத்திரமானதும் உறுதி நிறைந்ததுமான உரை ஒன்றை ஆற்றினார்.

அவர் தனது உரையில், "நாற்பது வருட கால இடப்பெயர்வு மற்றும் புலம் பெயர்வு ஆகியவற்றுக்குப்பின்னர் ஈழத் தமிழர்கள் தற்போது உலகின் பல நாடுகளிலும் தங்களை மீளக் கட்டியெழுப்பி வர்த்தகத்திலும் கல்வியிலும் பொருளாரத்திலும் அறிவிலும் ஆற்றலில் உயர்ந்து நின்ற வண்ணம் உலகிற்கு வழிகாட்டுகின்ற அளவிற்கு பல்வேறு தளங்களில் நிமிர்ந்து நிற்கின்றனர. அந்த ஒ ற்றுமையையும் உறுதியையும் உயர்வையும் உலகத்தவர்களுக்கு காட்டும் வகையிலேயே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்றார்.

அவரைத் தொடர்ந்த அங்கு யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்துள்ள பேராசிரியர் அ. சண்முகதாஸ் உட்பட பல பேராசிரியர்களும் ஒன்றாரியோ மாகாண அமைச்சர்களில் ஒருவரான ரேமன்ட் சோ அவர்கள் உட்பட பல அரசியல் பிரமுகர்களும் அங்கு உரையாற்றினர். இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் அவர்களும் அங்கு சிறப்புரையாற்றினார்.

தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் மொழி மற்றும் பண்பாடு கலை இலக்கியம். வாழ்வியல் தொடர்பான தலைப்புக்களில் உரைகளும் ஆய்வு மன்றங்களும் இடம்பெறவுள்ளன.

மலேசியாவிலிருந்து எழுத்தாளரும் பேச்சாளரும் மாநாட்டின் விழாக்குழுவில் முக்கிய பங்குவகிப்பவருமான இராஜேந்திரன் பெருமாள், இலங்கை "வீரகேசரி" பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் அவர்கள், இலங்கையிலிருந்து திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குகதாசன் அவர்கள், மற்றும் பிரான்ஸ் தேசத்தில் வாழும் ஈழத்தின் "பிறவிக்" கலைஞர்களான புகழ்பெற்ற தயாநிதி மற்றும் குணபாலன் (நையாண்டி மேளம் புகழ்) உட்பட பலர் தற்போது கனடாவின் ரொறன்ரோ மாநகருக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இந்த பிரமாண்டமான நான்கு நாள் மாநாடு தொடர்ச்சியாக மிகுந்த பொருட்செலவில் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாடு நான்கு நாட்களும் இடம்பெறும் மண்டபங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

- 15ம் திகதி வியாழக்கிழமை: காலை 9.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை - Centennial College Event Centre - 937 Progress Ave., Scarborough
- 16ம் திகதி வெள்ளிக்கிழமை: காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை - Centennial College Event Centre - 937 Progress Ave., Scarborough
- 17ம் திகதி சனிக்கிழமை: காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5..00 மணி வரை - Centennial College Event Centre - 937 Progress Ave., Scarborough

மாலை 6.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை

கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகள் மற்றும் இசை நிகழ்ச்சி - Metropolitan Centre - 3840 Finch Avenue East, Scarborough

- 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை: "அனைத்துலக தமிழர் பேரவை" அமைப்பின் இராப்போசன விருந்து மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 11..00 மணி வரை - Durham Convention Centre - 30 Beck Crescent, Ajax

**தகவல்: சத்தியன்**

--------------------------------------------------------

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 25ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா சிறார்களுக்கான போட்டிகள்



## போட்டிகள் நடைபெறும் இடம்: ஆத்மஜோதி இல்லம்

**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

திருமுறை மனனப் போட்டி

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

பேச்சுப் போட்டி

நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

# திருமுறைவிழா 2025

## இடம்: ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8

காலம்: டிசம்பர் 05 சனிக்கிழமை (05-12-2026) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | | | |
|---|---|---|---|
| பாலர்பிரிவு: | 30-11-2020 ஆம் திகதியும் அதன் பின் பிறந்தவர்களும் | | |
| கீழ்ப்பிரிவு: | 30-11-2020 | - | 30-11-2016 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 30-11-2016 | - | 30-11-2012 க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 30-11-2012 | - | 30-11-2008 க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி நவெம்பர் 25, 2026**

விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்

**தொடர்புகளுக்கு**

Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும் பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்

**முருகன் புத்தகசாலை,**
GTA MALL 5215 Finch Ave. E. 416-321-0285
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**சிவ முத்துலிங்கம் 416-724-6240**
**ஜனா தயாபரன்:416-560-1812**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

# இனிய நவராத்திரி நல்வாழ்த்துகள்!

துர்க்கையின் துணிவும்,
இலக்குமியின் வளமும்,
சரஸ்வதியின் ஞானமும்
உங்கள் வாழ்வில் பெருகட்டும்.





## LOGAN KANAPATHI

**MPP for Markham-Thornhill**

*PA to the Minister of Red Tape Reduction*

NEED HELP WITH A PROVINCIAL ISSUE? CONTACT ME!

TEL: 905 - 305 - 1935
E-MAIL: LOGAN.KANAPATHICO@PC.OLA.ORG
WEBSITE: WWW.LOGANKANAPATHI.CA
ADDRESS: 7380 MCCOWAN ROAD, UNIT3, MARKHAM, ON L3S 3H8

Logan_Kanapathi
Logan Kanapathi
logankanapathi
LoganKanapathi

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24



## RE-ELECT NICK MANTAS
FOR CITY COUNCILLOR
Ward 22 | Scarborough-Agincourt

## GETTING THINGS DONE FOR OUR COMMUNITY

Des résultats concrets pour notre communauté

为我们的社区做实事

Με έργο και αποτελεσματικότητα για την κοινότητα μας

Կը նպաստեմ ու կ'աջակցիմ համայնքի կարիքներուն

عمل ونتائج من أجل مجتمعنا

நமது சமூகத்திற்காக செயல்பட்டு பலன்களை வழங்குகிறோம்

ہماری کمیونٹی کے لیے کام اور نتائج

Naghahatid ng mga resulta para sa ating komunidad.

Learn more at www.nickmantas.com

hello@nickmantas.com | 416-321-8898


VJ PRODUCTIONS
IN ASSOCIATION WITH
VIJAYA JEWELLERY
PRESENTS
PRODUCTIONS
Vijaya Jewellery
TITLE SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
Makka
LIVE IN TORONTO
POWERED BY
GTA COACH
YOUR TRUSTED TRAVEL PARTNER SINCE 1989
EVENT SPONSOR
YORK
PRIMA
New Nanthu's Kitchen
HI FI BARBERSHOP
THE CHOP SHOP
GOLD SPONSOR
SILVER SPONSOR
GS CAPITAL GROUP
EXCLUSIVE RADIO PARTNER
east FM 102.7
SASITHA SUYATHARAN
Mortgage Broker
Academy of Learning
CAREER COLLEGE
McCowan / 401 North
LAND KING
JEGAN
DATE
SATURDAY, October 24TH
2026
TIME
5:30 PM
CANADA EVENT CENTRE
300 WATER ST, WHITBY, ON L1N 9B6
DOORS OPEN 5:30 PM | SHOW STARTS AT 6:00 PM
COLLABORATING WITH
TORONTO SINGERS & MUSICIANS

ELECT

# PIRAVENA

## SATHIYANANTHAM (B.Eng)

### COUNCILLOR CANDIDATE -SCARBOROUGH NORTH - WARD 23

**ஒரே ஒரு தமிழ் வேட்பாளராக ஸ்கார்புரோ வடக்கு 23ம் வட்டார**
**City Councillor க்கு தேர்தலில் போட்டியிடும்**
**பிரவீணா சத்தியானந்தத்தை Councillor ஆகத் தேர்ந்தெடுப்போம்.**

**அக்டோபர் 26, திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை**
**8 மணிக்கு இடையில் அவர்களுக்கு உங்கள் வாக்கை பதிவு செய்யுங்கள்!**

**நான் City Councillor ஆக தெரிவு செய்யப்பட்டால்**
**எனது வட்டாரத்திற்கு நான் செய்ய உள்ள செயற்பாடுகள்**

வீட்டு வரியை குறைப்பதற்கு முயற்சி செய்வேன்.

பாதுகாப்பை அதிகரித்து திருட்டு சம்பவம், வன்முறை போன்றவற்றை இல்லாமல் செய்து
பாதுகாப்பான பிரதேசமாக எமது பிரதேசத்தை மாற்றுவேன்.

சுத்தமான, பசுமையான சூழலை உருவாக்க பூங்காக்களை விரிவுபடுத்தவும், பொழுது போக்கு வசதிகளை மேம்படுத்தவும்,
சமூக நிலையங்களை விரித்தி செய்யவும் முயற்சி செய்வேன்.

போக்கு வரத்து நெரிசலை குறைத்தல், மேலும் வாகன நிறுத்துமிடங்களுக்கு நடைமுறைக்கு சாத்தியமான தீர்வு காணல்.

வீடுகள் நெருக்கமாக அமைந்துள்ள பகுதிகளில் வாகன வேகத்தை கட்டுப்படுத்த Speed Buml அமைத்தல்.

இப்பொழுது முதியவர்களின் தொகை கூடிக்கொண்டு வருகிறது, ஆகவே அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி செய்வேன்,

மேலும் மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்ப்பதிலும், வியாபாரிகள் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதிலும்
நமது வட்டாரத்தை அனைவருக்கும் உகந்த இடமாக மாற்றுவதிலும் நான் உறுதியாக செயற்பட தேர்தல் தினத்தன்று வாக்கு பலம் உள்ளவர்கள்
உங்கள் வாக்கை செலுத்துவதன் மூலம் எங்களுடைய ஜனநாயக உரிமையை சரியான முறையில் நாங்கள்
நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன

## *What I will do:*

*Safer Communities –*
*Work with city departments on community safety and violence.*

*Property Taxes –*
*Advocate for affordable property taxes and responsible spending to ease the financial burden on residents.*

*Parks and Recreation –*
*Improve parks, playgrounds, community centers and recreational programs.*

*Helping Seniors –*
*Support seniors' programs, accessible services and community activities.*

*Listening to Residents –*
*Respond to residents' concerns and bring their issues to City Hall.*



உங்கள்
ஆதரவு
எங்கள்
வெற்றி

| 107 | Piravena Sathiyanantham | ● |
| --- | --- | --- |

**ELECTION DAY: 2026 OCT 26**
10.00AM - 8.00PM

Together for a
Better Scarborough!

www.piravena.ca electpiravena@gmail.com

**Need a ride to Vote? Lawn sign? Call me**
**647-354-0618 / 437-324-0618 / 437-428-0618**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய 350 கிலோ எடை கொண்ட மூன்று "மஞ்சள் வால்" கேரை மீன்

## அதிக பணத்திற்கு அவற்றை விற்று மகிழ்ந்த மீனவர்கள்



- எஸ்.ஆர்.லெம்பேட் (13-10-2026)

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்ற பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் 350 கிலோ எடை கொண்ட மூன்று மஞ்சள் வால் கேரை மீன் சிக்கியதால் பாம்பன் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அடுத்த பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று 50க்கும் அதிகமான நாட்டுப்படகுகள் நூற்றுக்கணக்கான மீனவர்கள் தென்கடல் பகுதியான மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன் பிடிக்க சென்றிருந்தனர்.

மீனவர்கள் மீன் பிடித்து விட்டு 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அ ன்று செவ்வாய்க்கிழமை காலை பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்திற்கு திரும்பினர்.

வட கிழக்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்தம் உருவாகியுள்ளதால் கடல் வழக்கத்திற்கு மாறாக சற்று சீற்றத்துடன் காணப் பட்டு வரும் நிலையில் கடல் நீரோட்டம் அதிகமாக இருப்பதால் மீன் பிடித்து கரை திரும்பிய மீனவர்கள் வலையில் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்படும் நகரை, பாறை, நெத்திலி உள்ளிட்ட மீன்கள் அதே போல் கிளாத்தி, சீலா, மாவுலா, கிளி, பாறை, முண்டகண்ணி பாறை, கட்டா, சூவாரை உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் வரத்து எதிர்பார்த்த அளவை விட அதிகளவு கிடைத்ததால் மீனவர்கள் மகிழ்ச்சியுடன் கரை திரும்பினர்.

இந்நிலையில் பாம்பன் பகுதியைச் சேர்ந்த மரிய டெலிசன் என்பவருக்கு சேர்ந்த நாட்டு படகில் சுமார் 3 மீட்டர் நீளம் கொண்ட 350 கிலோ எடை கொண்ட மஞ்சள் வால் கேரை மீன் என்றழைக்கப்படும் அம்பர்ஜாக் (YELLOW TAIL TUNA) மீன் மூன்று சிக்கியது.

பாம்பன் நாட்டுப்படகு மீனவர் வலையில் சிக்கிய 350 கிலோ எடை கொண்ட மஞ்சள் வால் கேரை மீனை கேரளா மீன் வியாபாரி ஒருவர் கிலோ ரூ.180 என ரூபாய் 63 ஆயிரம் கொடுத்து வாங்கி சென்றார்.

மூன்று மீன் 63 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானதால் நாட்டுப்படகு மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மஞ்சள் வால் கேரை மீனுக்கு கேரள மாநில அசைவ பிரியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த மீனை அரை கிலோ, ஒரு கிலோ என வெட்டி எடை போட்டு 20 ஊர்களுக்கு பிரித்து அனுப்பி விற்பனை செய்து விடுவேன் என கேரள வியாபாரி தெரிவித்தார்.

வாள் பகுதியில் மஞ்சள் நிறத்தில் தட்டையான கத்தி போன்ற அமைப்பு காணப்படும். அவை வேகமாக இடப்பெயர்ச்சி செய்யக்கூடியவை.

இந்த வகை மீன், அட்லாண்டிக், பசிபிக் மற்றும் இந்திய பெருங்கடலில் ஆழமான பகுதியில் வாழக்கூடியது. வழக்கமாக 3 மீ நீளம், மற்றும் அதிகபட்சம் 4.55 மீ நீளம் மற்றும் 550 கிலோ எடை வரை வளரக் கூடியது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# போக்குவரத்து கடமையின்போது மதுபோதையில் இருந்த நடத்துனரை பணியிடை நீக்கம் முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது!

பேருந்துச் சேவையில் மதுபோதையில் இருந்ததாகக் கூறப்படும் நடத்துநர் ஒருவரை, இது தொடர்பான விசாரணை நிறைவடையும் வரை தற்காலிகமாகப் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளதாக, வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 12.10.2026 அன்று சேவையில் ஈடுபட்டிருந்த பேருந்தின் நடத்துநர் யாழ்ப்பாணத்தில் மதுபோதையில் இருந்ததாகவும், இதன் காரணமாகப் பேருந்துச் சேவையைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டதாகவும் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு முறைப்பாடளிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் சங்கத்துக்கு தெரியப்படுத்திய அதிகார சபை உரிய நடவடிக்கைளை முன்னெடுக்குமாறு பணித்ததற்கு அமைவாக, விசாரணை நிறைவடையும் வரை குறித்த நடத்துநரைப் பணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன், பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுபவர்கள் பொறுப்புணர்வுடனும் ஒழுக்கத்துடனும் செயற்படுவது அவசியம் எனக் குறிப்பிட்டார். பயணிகளின்




பாதுகாப்பையும் போக்குவரத்துச் சேவையின் ஒழுங்கையும் உறுதிப்படுத்துவதற்கு சாரதிகளும் நடத்துநர்களும் தமது கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். சேவையின்போது இடம்பெறும் இத்தகைய ஒழுங்கீனங்கள் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுத்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பேருந்துச் சேவைகள் தொடர்பான குறைபாடுகள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் ஒழுங்கீனமான செயற்பாடுகள், பயணிகள் எதிர்கொள்ளும் சிரமங்கள் உள்ளிட்ட முறைப்பாடுகளைப் பொதுமக்கள் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முறைப்பாட்டு வட்ஸ்அப் இலக்கமான 071 9090900 ஊடாகத் தெரிவிக்கலாம்.






# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் நவராத்திரியை முன்னிட்டு சிறப்பு பூசை

குருவடி சரணம்

திருவடி சரணம்



மார்க்கம் ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் நவராத்திரி சிறப்பு பூசை

09-10-2026 வெள்ளிக்கிழமை காலை அமாவாசை சிறப்பு பூசையுடன் மகேஸ்வர பூசை நடைபெறும்.

10-10-2026 சனிக்கிழமை மாலை 5:00 தொடக்கம் 9:00 மணிவரை துர்க்கை வழிபாடு நடன நிகழ்ச்சியுடன் சிறப்பு பூசை ஆரம்பம்.

11-10-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை அகண்டம் ஏற்றப்பட்டு தொடர்ந்து பூசைகள், நடன நிகழ்சி நடைபெறும்.

தொடர்ந்து 10 நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.



18-10-2026 ஞாயிறு காலை பங்காரு அடிகளாரின் 3ம் ஆண்டு நிறைவுநாளை முன்னிட்டு குருபூசை சிறப்பாக நடைபெறும்.

மாலை தொடர்ந்து சரஸ்வதிபூசை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

20-10-2026 செவ்வாய்கிழமை காலை விஜயதசமி சிறப்புபூசை நடைபெறும்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். உங்களுக்கு விரும்பிய உதவிகள் செய்யலாம். பூ, தேசிக்காய் மற்றும் பூசைப்பொருட்கள் கொடுத்து உதவலாம். பகல் மகேஸ்வர பூசையுடன் முடிவடையும.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா

தொடர்புகளுக்கு: 647-436-9647



*(7ம் பக்கத் தொடர்ச்சி)*

முடக்கப்பட்டுள்ள ரஷ்ய அரசுச் சொத்துகள் தொடர்பான விவகாரமும் முக்கியத்துவம் பெறுகிறது. உக்ரைன் போருக்குப் பதிலடியாக ஐரோப்பிய நாடுகள் ரஷ்ய அரசுச் சொத்துகளை முடக்கியுள்ளன. அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பான முன்மொழிவுகள் சட்ட, நிதி மற்றும் அரசியல் சிக்கல்களை எழுப்புகின்றன. இந்த நடவடிக்கைகளின் சட்டபூர்வத்தன்மையை மாஸ்கோ எதிர்த்து வருகிறது.

போரின் தற்போதைய நிலைமையில் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமா அல்லது உடனடி சலுகைகள் மற்றும் பரஸ்பர பாதுகாப்பு உறுதிமொழிகள் மூலம் தீர்வைத் தேட வேண்டுமா என்பதே அடிப்படை முரண்பாடாக உள்ளது.

ரஷ்யாவில் ஜப்பானிய ஊடகவியலாளர் கைது: புதிய இராஜதந்திர நெருக்கடி

ஜப்பானிய ஊடகவியலாளர் யூகி இமாய் கைது செய்யப்பட்டுள்ளமை மாஸ்கோவுக்கும் டோக்கியோவுக்கும் இடையிலான உறவுகளில் புதிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

2026 அக்டோபர் 13 அன்று ரஷ்யாவின் கூட்டாட்சி பாதுகாப்புச் சேவை, ஹொக்கைடோ ஷிம்புன் பத்திரிகையில் பணியாற்றும் ஊடகவியலாளர் யூகி இமாயை உளவு பார்த்ததாகச் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்ததாக அறிவித்தது.

ரஷ்யாவின் பாதுகாப்புத் திறன்கள் தொடர்பான முக்கியமான தகவல்களை ஜப்பானிய உளவுத்துறைக்காக அவர் சேகரித்ததாக ரஷ்ய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். பின்னர் அவர் மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணைக்கு முந்தைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

ஊடகவியலாளரின் நிலை குறித்து தகவல்களை வழங்கவும், அவருக்கு மனிதாபிமானமான மற்றும் நியாயமான அணுகுமுறையை உறுதிப்படுத்தவும் ஜப்பான் கோரியுள்ளது. அவருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதில் சிக்கல்கள் இருப்பதாகவும் ஜப்பானிய அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

உக்ரைனுக்கு ஜப்பான் வழங்கும் ஆதரவு, ரஷ்யாவுக்கு எதிரான மேற்கத்திய தடைகள் மற்றும் குரில் தீவுகள் தொடர்பான நீண்டகாலப் பிரச்சினை ஆகியவற்றால் ஏற்கெனவே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தீவுகளை ஜப்பான் தனது வடக்குப் பிரதேசங்கள் என்று அழைக்கிறது.

இந்தக் கைது ஊடகச் சுதந்திரம், தேசியப் பாதுகாப்பு மற்றும் அரசியல் ரீதியாக உணர்வுபூர்வமான பகுதிகளில் பணியாற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான கேள்விகளை எழுப்புகிறது.

உளவு பார்த்ததாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தீவிரமானவை. இருப்பினும், அவை அதிகாரப்பூர்வ அறிவிப்புகளின் அடிப்படையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படாமல், நம்பகமான ஆதாரங்கள் மற்றும் நியாயமான சட்ட நடைமுறைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும்.

ஊடகவியலாளரின் உடல்நிலை, சட்டபூர்வமான உரிமைகள் மற்றும் தூதரக அணுகல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதே ஜப்பானின் உடனடி முன்னுரிமைகளாகும்.

வொரோனெஷ் ஆளில்லா விமானச் சதி: சுயாதீனமாக உறுதிப்படுத்தப்பட வேண்டிய குற்றச்சாட்டு

ரஷ்யாவின் வொரோனெஷ் பிராந்தியத்தில் உள்ள இராணுவ விமானத் தளத்தைக் குறிவைத்து உக்ரைன் வழிநடத்தியதாகக் கூறப்படும் ஆளில்லா விமான நடவடிக்கையைத் தடுத்ததாக ரஷ்யாவின் கூட்டாட்சி பாதுகாப்புச் சேவை தெரிவித்துள்ளது.

வெளியிடப்பட்ட காணொளியில் அதிகாரிகள் ஒரு வாகன நிறுத்துமிடத்தைச் சோதனையிடுவதும், கண்ணிவெடி அகற்றும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதும், ஆதாரங்களாகக் கருதப்படும் பொருட்களைச் சேகரிப்பதும் இடம்பெற்றுள்ளன.

பாதுகாப்புச் சேவையால் பதிவு செய்யப்பட்ட அறிக்கையில் தோன்றும் சந்தேகநபர், ஆளில்லா விமானங்களையும் வெடிபொருட்களையும் பெற்றுக்கொண்டு அவற்றைத் தயார்படுத்தி ரஷ்ய இராணுவ வசதியொன்றைத் தாக்குவதற்கான திட்டத்தில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனால், வெளியிடப்பட்ட காணொளி இந்தக் குற்றச்சாட்டுகளின் முழுமையையும், இலக்கின் அடையாளத்தையும் அல்லது உண்மையான தாக்குதல் நடைபெற்றதையும் சுயாதீனமாக உறுதிப்படுத்தவில்லை.

எனவே, இவை ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளாகவே கருதப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் நவீன போரில் ஆளில்லா விமானங்களின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. உளவு பார்த்தல், கண்காணிப்பு, போர்க்கள ஒருங்கிணைப்பு மற்றும் இராணுவ இலக்குகள் மீதான தாக்குதல்கள் போன்ற பல்வேறு பணிகளுக்கு இத்தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

போர்க்காலத்தில் வெளியிடப்படும் அதிகாரப்பூர்வ அறிக்கைகள் பயனுள்ள தகவல்களை வழங்கக்கூடும். அதேவேளையில், அவை அரசியல் நோக்கங்களுக்கும் தகவல் போர்முறைக்கும் பயன்படுத்தப்படலாம் என்பதால், சுயாதீனமான உறுதிப்படுத்தல் அவசியமாகிறது.

விரிவான மூலோபாயப் பார்வை: தொழில்நுட்பம், எரிசக்தி மற்றும் கூட்டணி நம்பகத்தன்மை

இந்தச் சம்பவங்களை ஒன்றாகப் பார்க்கும்போது, போரைத் தீர்மானிக்கும் மூன்று முக்கியமான சவால்கள் தெளிவாகின்றன.

முதலாவது: தொழில்நுட்பச் சார்புநிலை

உக்ரைன் செயற்கைக்கோள் தொடர்பாடல் சேவைகளைச் சார்ந்திருப்பது, பாதுகாப்பான மற்றும் மாற்று வழிகளைக் கொண்ட இராணுவத் தொடர்பாடல் அமைப்புகளின் அவசியத்தை வெளிப்படுத்துகிறது. மாற்றுத் தொழில்நுட்பங்களையும் காப்புத் தொடர்பாடல் அமைப்புகளையும் உருவாக்குவது வெளிப்புறக் கட்டுப்பாடுகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம். இருப்பினும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நேரம், முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு தேவைப்படும்.

இரண்டாவது: எரிசக்திப் பாதுகாப்பு

மின்சார உற்பத்தி நிலையங்கள் மற்றும் விநியோகக் கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் பொதுமக்களின் வாழ்க்கையைப் பாதிப்பதுடன், உக்ரைனின் அரசாங்கத்திற்கும் அதன் சர்வதேச ஆதரவாளர்களுக்கும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இதனைத் தடுக்கத் தெளிவான விதிமுறைகளும் நம்பகமான கண்காணிப்பும் அவசியம்.

மூன்றாவது: மேற்கத்திய நாடுகளின் ஒற்றுமை

உக்ரைனின் பாதுகாப்பு இராணுவ உதவி, உளவுத்துறை ஒத்துழைப்பு மற்றும் இராஜதந்திர ஆதரவு ஆகியவற்றின் தொடர்ச்சியைச் சார்ந்துள்ளது. கூட்டணி நாடுகளுக்கிடையே வெளிப்படையாகத் தோன்றும் கருத்து வேறுபாடுகள், நடைமுறையில் உதவிகள் தொடர்ந்தாலும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கக்கூடும்.

மறுபுறம், பொருளாதாரத் தடைகள், எரிசக்தி வருவாயில் ஏற்படும் அழுத்தங்கள், இராணுவச் செலவுகள் மற்றும் நீண்டகாலப் போரின் பொருளாதாரச் சுமைகள் ஆகியவற்றையும் ரஷ்யா எதிர்கொள்கிறது. ஆனால் இந்த அழுத்தங்கள் மாஸ்கோவின் கொள்கைகளை எந்த அளவுக்கு மாற்றும் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

ஐரோப்பிய நாடுகளின் சவால், இராணுவத் தடுப்புத் திறனைப் பேணுவதுடன் இராஜதந்திர முயற்சிகளையும் முன்னெடுப்பதாகும். அதேவேளையில், பேச்சுவார்த்தைகள் நம்பகமான பாதுகாப்பு உறுதிமொழிகளுக்கு மாற்றாக மாறிவிடக் கூடாது.

அடுத்த சில நாட்களில் கவனிக்க வேண்டிய முக்கிய முன்னேற்றங்கள்

- ஸ்டார்ஷீல்ட் கட்டுப்பாடுகள்: ஸ்பேஸ்எக்ஸ், வாஷிங்டன் மற்றும் கீவ் ஆகியவை கட்டுப்பாடுகள் தொடர்பாகத் தெளிவான விளக்கமளிக்குமா? பாதிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கான தொடர்பாடல் மீண்டும் நம்பகத்தன்மையுடன் செயல்படுமா?

- அமெரிக்க உளவுத்துறை ஒத்துழைப்பு: உக்ரைனுக்கு வழங்கப்படும் உளவுத்துறை ஆதரவின் தொடர்ச்சி மற்றும் வரம்புகள் குறித்து வாஷிங்டன் மேலதிக விளக்கமளிக்குமா?

- எரிசக்திப் போர்நிறுத்தம்: இரு நாடுகளும் தெளிவான விதிமுறைகள், கண்காணிப்பு ஏற்பாடுகள் மற்றும் மீறல்களுக்கான நடவடிக்கைகள் தொடர்பாக உடன்படுமா?

- பிரிட்டன் மற்றும் ஐரோப்பாவின் இராணுவ உதவி: அறிவிக்கப்பட்ட வான் பாதுகாப்பு ஏவுகணைகள் மற்றும் பிற உதவிகள் உக்ரைனின் பாதுகாப்பை நடைமுறையில் வலுப்படுத்துமா?

- ஜப்பானிய ஊடகவியலாளர் விவகாரம்: ரஷ்யா தூதரக அணுகலையும் மேலதிகத் தகவல்களையும் வழங்குமா? ஜப்பான் மேலதிக இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

- சமாதான முயற்சிகள்: இரு தரப்பினரும் உண்மையான பேச்சுவார்த்தைகளை நோக்கி நகர்வார்களா அல்லது இராணுவ அழுத்தத்தையும் போட்டித்தன்மை கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகளையும் தொடர்ந்து பயன்படுத்துவார்களா?

இந்த முன்னேற்றங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தியும் மதிப்பிடப்பட வேண்டும். செயற்கைக்கோள் தொடர்பாடலில் ஏற்பட்ட கட்டுப்பாடு உளவுத்துறை ஒத்துழைப்பு முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை நிரூபிக்காது. அதேபோன்று, போர்நிறுத்த அறிவிப்பு வெளியிடப்படுவது தாக்குதல்கள் உண்மையில் நிறுத்தப்பட்டுவிட்டன என்பதையும் நிரூபிக்காது.

முடிவுரை: உக்ரைன் போர் என்பது மேற்கத்திய நாடுகளின் மூலோபாய உறுதிப்பாட்டிற்கான சோதனையும் ஆகும்

2026 அக்டோபர் 13-14 ஆகிய நாட்களில் வெளிப்பட்ட முன்னேற்றங்கள், ரஷ்யா-உக்ரைன் போரின் அடிப்படை யதார்த்தத்தை மீண்டும் வெளிப்படுத்துகின்றன. போர்க்கள வெற்றி என்பது வீரர்கள், ஆயுதங்கள் மற்றும் நிலப்பரப்பு ஆகியவற்றை மட்டுமே சார்ந்ததல்ல. தொழில்நுட்பம், எரிசக்தி உள்கட்டமைப்பு, உளவுத்துறை மற்றும் சர்வதேசக் கூட்டாளிகளின் அரசியல் நம்பகத்தன்மை ஆகியவையும் அதனைத் தீர்மானிக்கின்றன.

ஸ்டார்ஷீல்ட் தொடர்பான கட்டுப்பாடுகள் உக்ரைனின் இராணுவத் தொடர்பாடலில் இருக்கக்கூடிய பாதிப்புகளை வெளிப்படுத்தியுள்ளன. ஏவுகணைத் தாக்குதல்களுக்கு முன்னதாகத் தகவல்கள் கிடைப்பது தொடர்பான கவலைகள் உளவுத்துறை ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் குளிர்காலத் தயாரிப்புகளின் அவசரத் தேவையை மேலும் வலியுறுத்துகின்றன.

பிரிட்டனின் இராணுவ உதவி, உக்ரைன் மூலோபாய ரீதியாகத் தனிமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான ஐரோப்பாவின் முயற்சியை வெளிப்படுத்துகிறது. அதேவேளையில், ஜப்பானிய ஊடகவியலாளரின் கைது மற்றும் ஆளில்லா விமானச் சதி தொடர்பான ரஷ்யாவின் குற்றச்சாட்டு ஆகியவை இந்தப் போரின் தாக்கங்கள் பரந்த சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளிலும் எதிரொலிப்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மேற்கத்திய நாடுகள் நம்பகமான இராணுவ உதவி, தொடர்ச்சியான பொருளாதார அழுத்தம் மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய இராஜதந்திரத் தீர்வு ஆகியவற்றை ஒருங்கிணைந்த மூலோபாயமாகத் தொடர்ந்து முன்னெடுக்க முடியுமா என்பதே இன்றைய முக்கியமான கேள்வியாகும்.

இந்த ஒற்றுமை பலவீனமடைந்தால், கீவ் மீது அழுத்தத்தை அதிகரிக்கவும் அதன் ஆதரவாளர்களிடையே பிளவுகளை உருவாக்கவும் மாஸ்கோ வாய்ப்புகளைப் பெறக்கூடும். மாறாக, மேற்கத்திய ஒத்துழைப்பு வலுவாகத் தொடர்ந்தால், பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் குறைக்கும் மற்றும் நம்பகமான உறுதிமொழிகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வைத் தேடும் வாய்ப்புகள் அதிகரிக்கலாம்.

இறுதியில், நீடித்த சமாதானம் என்பது இராஜதந்திர அறிவிப்புகளால் மட்டும் உருவாகாது. தெளிவான உறுதிமொழிகள், நம்பகமான கண்காணிப்பு மற்றும் அமலாக்க நடைமுறைகள், சர்வதேசச் சட்டத்திற்கான மரியாதை, எதிர்கால ஆக்கிரமிப்புகளைத் தடுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை அவசியமாகும்.

**எழுதியவர் - ஈழத்து நிலவன்**
**தமிழ்த் தேசிய வரலாற்றாய்வாளர் | உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை மற்றும் இராணுவ ஆய்வாளர்**

# இவ்வார ராசிபலன்

## 16-10-2026 வெள்ளி தொடக்கம் 22-10-2026 வியாழன் வரையும்







**மேஷம்:** மேஷராசி அன்பர்களே! குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரை யொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாகப் பாடுபடவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். இந்த வாரம் வீடு வாங்கும் யோகம் உண்டு. புதிய வீடு வாங்கவும், இடம் வாங்கவும், வீடு கட்டவும் இது மிகவும் உகந்த வாரம். வெள்ளிக்கிழமை அன்று வீடு சம்பந்தமான பத்திர வேலைகளை தொடங்கலாம். வங்கி கடன் எளிதில் கிடைக்கும். பரம்பரை சொத்து பிரச்சனைகள் உங்களுக்கு சாதகமாக முடியும். திருமண தடைகள் விலகும் வாரம். குரு பகவான் பார்வையால் திருமண யோகம் கைகூடும். காதல் திருமணம் பெரியவர்கள் சம்மதத்துடன் நடக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு | எண்: 9 | நாள்: செவ்வாய், வெள்ளி




**ரிஷபம்:** ரிஷபராசி அன்பர்களே! பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவையற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக் கசப்புகள் விலகும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்ட நாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருக்கும் வேலையில் இருந்து வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்க்கவும். கடையை வேறு இடத்துக்கு மாற்றம் செய்வதையும் தவிர்க்கவும். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் உடல் அசதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தருவதாக இருக்கும். சுக்கிரன் பலமாக இருப்பதால் வீட்டை அழகுபடுத்தும் வேலைகள், புதிய பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரிகளுக்கு இந்த வாரம் புதிய முதலீடுகள் லாபத்தை கொடுக்கும், கூட்டுத்தொழில் சிறக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும், வீட்டில் திருமணம், கிரகப்பிரவேசம் போன்ற நல்ல காரியங்கள் கைகூடும், வீடு, நிலம் வாங்கும் முயற்சி வெற்றியாகும். காதல் விவகாரத்தில் இருப்பவர்களுக்கு இனிமையான செய்தி வரும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பரிகாரமாக வெள்ளிக்கிழமை மகாலட்சுமியை வழிபட்டு வெள்ளை மலர் சாற்றி வர செல்வம் பெருகி வீடு தேடி வரும் யோகம் நிலைக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, பச்சை | எண்: 6 | நாள்: வெள்ளி




**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! வார முற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். வாரப் பிற்பகுதியில் நீங்கள் நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப வி'யத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த சலுகை கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். வீடு மாற்றம், இடமாற்றம் ஏற்படும் வாரம். வாடகை வீட்டில் இருப்பவர்கள் சொந்த வீட்டிற்கு மாறும் யோகம் உண்டு. புதிய வீடு வாங்குவதற்கான கடன் முயற்சிகள் வேலையில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரும், அதை சரியாக பயன்படுத்தினால் பதவி உயர்வு நிச்சயம். தொழில் செய்பவர்களுக்கு புதிய நபர்களின் அறிமுகம் லாபத்தை தரும், பயணங்களால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும், பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை | எண்: 5 | நாள்: புதன்




**கடகம்:** கடகராசி அன்பர்களே! எதிலும் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். பணவரவைப் பொறுத்தவரை திருப்திகரமான போக்கே காணப்படுகிறது. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகளில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யவும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் வருகை செலவுகளை ஏற்படுத்துவதுடன் மகிழ்ச்சியும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். சக ஊழியர்கள் தங்கள் பணிகள் தொடர்பாக உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். புதிய முதலீடுக்கான பண உதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். அலுவலகம் செல்பவர்களுக்கு திருப்தி தரும் வாரம். நீண்ட நாட்களாக வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு சொந்த வீடு வாங்கும் யோகம் கைகூடும், நிலம் வாங்கும் முயற்சி வெற்றியாகும், வீடு கட்டும் பணிகள் தடையின்றி நடக்கும். பண வரவை பொறுத்தவரை எதிர்பாராத தனலாபம் உண்டு, கடந்த கால கடன்கள் அடையும், சேமிப்பு உயரும். வேலையில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை குறைந்து நிம்மதி கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்து லாபம் பெருகும். குடும்பத்தில் தாய் வழி உறவுகளால் ஆதாயம் உண்டு, குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும், திருமண முயற்சிகள் கைகூடும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை | எண்: 2 | நாள்: திங்கள், வெள்ளி




**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வீண் செலவுகள் இருக்காது. பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். தந்தைவழி உறவினர்களால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய முயற்சிகள் தொடங்குவதற்கு உகந்த வாரம். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு முயற்சி செய்வதைத் தவிர்க்கவும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்றவோ அல்லது விரிவுபடுத்தவோ நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. பூர்வீக சொத்தில் இருந்த தடைகள் விலகும். புதிய வீடு கட்டும் பணி தொடங்கலாம், பண வரவை பொறுத்தவரை பல மடங்கு அதிகரிக்கும், புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உள்ளது, வீடு கட்டி பாதியில் நிற்பவர்களுக்கு பணம் கிடைத்து வேலைகள் முடியும், வாகன யோகமும் உண்டு. குடும்பத்தில் உங்கள் சொல்லுக்கு மரியாதை அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமை உண்டாகும், திருமணம் தடைபட்டவர்களுக்கு திருமணம் கூடி வரும். காதல் விஷயத்தில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, சிவப்பு | எண்: 1 | நாள்: ஞாயிறு




**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். கொடுத்த கடனும் திரும்பக் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவிஉயர்வு அல்லது ஊதியஉயர்வு கிடைப்பதற்கும் சாத்தியமுண்டு. இதுவரை கண்டிப்பாக இருந்த அதிகாரி கனிவுடன் நடந்துகொள்வார். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்டுச் செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சொத்து பிரச்சனையில் சட்ட ரீதியாக வெற்றி கிடைக்கும். வீட்டில் இருந்த பழுதுகளை சரி செய்வீர்கள். வீட்டிற்கு புதிய மின் சாதனங்கள் வாங்குவீர்கள். பண வரவை பொறுத்தவரை பல வழிகளில் இருந்து பணம் வந்து சேரும், கடன் பிரச்சனைகள் தீரும், சேமிப்பு உயரும், புதிய முதலீடுகள் லாபம் தரும். வேலையில் இருப்பவர்களுக்கு நீண்ட நாள் நிலுவையில் இருந்த பதவி உயர்வு கிடைக்கும், மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சொந்ததொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து லாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும், திருமண முயற்சிகள் வெற்றியாகும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை | எண்: 5 | நாள்: புதன்




**துலாம்:** துலாராசி அன்பர்களே! பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். அவருடன் சுமுகமான உறவு ஏற்படும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசர ணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இடமாறுதல் கிடைக்கும். சலுகைகளும் கிடைக்கக்கூடும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பு தருவார்கள். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். என்றாலும் உற்சாகத்துடன் சமாளித்துவிடுவீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும் வெளிநாட்டு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். தொழில் செய்பவர்களுக்கு கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு, லாபம் பெருகும். குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும், சுப நிகழ்ச்சிகள் நடக்கும், திருமணம் கைகூடும். காதல் விஷயத்தில் இனிமையான தருணங்கள் உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, வெளிர் நீலம் | எண்: 6 | நாள்: வெள்ளி

(தொடர்ச்சி 20 பக்கம்)

# 'காவி' முன் மண்டியிட்ட ''சிவப்பு''ச் சட்டைகள்



*""இலங்கையில் அரசியலமைப்பை விடவும், பாராளுமன்ற பெரும்பான்மையை விடவும் ,மக்களின் தெரிவை விடவும் மகாசங்கத்தின் முடிவே இறுதித் தீர்ப்பாக அமைகிறது. ஆட்சியாளர்கள் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட முற்பட்டாலும், காவி உடைக்கு முன்னால் தங்களின் "அதிகாரக் கிரீடத்தைக்" கழற்றி வைத்துவிட்டு தலைவணங்குவதை, .அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை பிக்குகளுக்காக சிறை விதிகளை மாற்ற முடிவுசெய்து""காவியுடை""முன்பாக மண்டியிட்ட சிவப்பு சட்டை ஜனாதிபதி அநுரகுமாரவின் சரணாகதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது"*

*------------------------------------------------------------கே.பாலா*

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சியாளர்கள் மாறலாம், நீலம், பச்சை, கருஞ்சிவப்பு, சிவப்பு என நிறங்கள் ஆட்சிபுரியலாம், அரசியலமைப்பு சட்டங்கள் திருத்தப்படலாம், மாற்றுக்கொள்கை யுடையவர்கள் கூட அதிகாரத்தின் உச்சத்திற்கு வரலாம். ஆனால், அவர்கள் அத்தனை பேரின் தலைவிதியையும் ஆட்சியின் பாதையையும் தீர்மானிக்கும் இறுதி அதிகாரப் புள்ளியாகத் திகழ்வது நாட்டின் ""காவியுடை"" அரசியல் மையமான மகாசங்கமே.

"சர்வவல்லமை படைத்தவர்கள்" மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்பலம் பெற்றவர்கள், மூவின மக்களின் பேராதவினைப்பெற்றவர்கள் என்று தங்களை நினைத்துக் கொள்ளும் இடதுசாரி ஆட்சியாளர்களான சிவப்பு சட்டைக்காரர்கள் கூட கூட, காவி உடைக்கு முன்னால் தலைவணங்க,அடிபணியக் கடமைப்பட்டவர்கள் என்பதை அண்மையில் பொதுபலசேன ஞானசார தேரரின் சிறைத்தண்டனை விவகாரத்திலும், அதைத் தொடர்ந்து நிகழ்ந்த காவியுடை அரசியல் நகர்வுகளிலும் நாடு மீண்டும் ஒருமுறை கண்டுகொண்டது.

முதலாளித்துவம், சோசலிசம், தேசியவாதம் என




எந்தக் கொள்கையைப் பேசும் அரசாக இருந்தாலும், இலங்கை அரசியலின் "செல்லுபடியாகும் கடைசிச் சீட்டு" பௌத்த பிக்குகளின் கைகளிலேயே இருக்கிறது. மார்க்ஸியக் கோட்பாடுகளையும், வர்க்கப் போராட்டத்தையும் முதன்மையாகக் கொண்டு அதிகாரத்திற்கு வந்த ஜே.வி.பி. தலைமையிலான "சிவப்புச் சட்டை" ஆட்சியாளர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. சட்டத்தின் ஆட்சி, சமத்துவம் என்றெல்லாம் முழங்கினாலும், ஞானசார தேரரின் விவகாரத்தில் காவியுடைக்கு முன்னால் அரச அதிகாரம் எவ்வாறு பணிந்தது என்பது தற்கால அரசியலின் மிகப்பெரிய சான்றாகும்.

வழக்கு -தண்டனை

2016 ஆம் ஆண்டு ஹோமாகம நீதிமன்றத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு விசாரணையின் போது, நீதிமன்ற அறைக்குள் நுழைந்து நீதிபதியை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டதற்காக இலங்கையில் பொதுபலசேனா (டீடீளு) அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது. 2018 ஆம் ஆண்டு மேல்முறையீட்டு நீதிமன்றம் ஞானசார தேரர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி, அவருக்கு 6 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. தனக்கு எதிரான இந்த தண்டனையை எதிர்த்து ஞானசார தேரர் தாக்கல் செய்த மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், உடல்நலக் குறைவு காரணமாக அவர் சிறைச்சாலை வைத்தியசாலையிலும், பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் .இச்சம்பவம் பௌத்த மக்கள் மத்தியிலும் அரசியல் வட்டாரங்களிலும் தொடர்ச்சியான விவாதமாக இருந்த நிலையில், 2019 மே மாதத்தில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.விடுதலையானதைத் தொடர்ந்து அவர் மீண்டும் முறைப்படி காவியுடை அணிந்து தனது மத நடவடிக்கைகளைத் தொடர்ந்தார்.

பொதுமன்னிப்பு -தலைமறைவு

ஆனால் அந்த ஜனாதிபதி பொதுமன்னிப்பு சட்டத்திற்குப் புறம்பானது எனக் கூறி தொடரப்பட்ட அடிப்படை உரிமை வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், ஜனாதிபதி அளித்த பொதுமன்னிப்பை செல்லாது என ரத்து செய்தது.இதன் விளைவாக, ஞானசார தேரரது மீதமுள்ள சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்காக அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மேல்முறையீட்டு நீதிமன்றம் திறந்த பிடியாணை பிறப்பித்தது. மேல்முறையீட்டு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்ததைத் தொடர்ந்து, ஞானசார தேரர் தலைமறைவானார். எனினும் பொலிஸார் மேற்கொண்ட சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் மூலம், களுத்துறை காட்டுப்பகுதியில் உள்ள ஒரு பௌத்த விகாரையில் தலைமறைவாக இருந்த ஞானசார தேரர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட ஞானசார தேரர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டார். 2019-இல் பொதுமன்னிப்பு பெறுவதற்கு முன்னர் அவர் சுமார் 9 மாதங்கள் மட்டுமே சிறையில் இருந்ததால், 6 ஆண்டு கடுங்காவல் தண்டனையில் மீதமுள்ள காலத்தை அவர் முழுமையாகச் சிறையில் அனுபவிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் வகையில் பேசியதற்காக 2024 மார்ச் மாதத்தில் அவருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஞானசார தேரருக்கு எதிராக இருந்த பிற வழக்குகளிலும் அவரது குற்றங்கள் உறுதிசெய்யப்பட்டு சிறைத்தண்டனைத் தீர்ப்புகள் மேல்முறையீட்டு மேல்நீதிமன்றங்களாலும் உறுதி செய்யப்பட்டன.

காவியுடை களைவு

இதனையடுத்து ஞானசார தேரர் வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு நடைமுறையிலுள்ள சிறைச்சாலைச் சட்டங்கள் மற்றும் விதிகளின்படி அவர் நடத்தப்பட்டார். இலங்கை சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் கீழ், குற்றவியல் வழக்கின் அடிப்படையில் கடுங்காவல் தண்டனை பெறக்கூடிய எந்தவொரு நபரும் சிறைச்சாலையின் சீருடையையே அணிய வேண்டும். இதன் அடிப்படையில், ஞானசார தேரரின் காவியுடை களையப்பட்டு , கைதிகளுக்கான வெள்ளை நிற சிறை ஆடை அவருக்கு வழங்கப்பட்டது.

இதுதான் தற்போது இலங்கையின் மகாசங்கங்களையும் பௌத்தர்களையும் கொதிப்படைய வைத்ததுடன் சிவப்பு சட்டைக்காரர்களான ஆட்சியாளர்களுக்கும் பெரும் நெருக்கடியைக்கொடுத்தது. பௌத்த துறவி ஒருவரின் சம்மதமின்றியோ அல்லது மகாநாயக்கத் தேரர்களின் (பௌத்த பீடாதிபதிகள்) வழிகாட்டல்.்.அனுமதியின்றியோ அவரது காவியுடையை அகற்றுவது பௌத்த தர்மத்திற்கும், மத மரபுகளுக்கும் எதிரானது.ஒரு பௌத்த துறவி வினய (துறவற) விதிகளை மீறி தானாக முன்வந்து காவியுடையைத் துறந்தால் ஒழிய, அரச அதிகார அமைப்புகள் அல்லது சிறைத்துறை மூலமாக பலவந்தமாகவோ அல்லது சட்டத்தின் பெயராலோ காவியுடையைக் கழற்ற வைப்பது பௌத்த கலாசாரத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என கடும் எதிர்ப்பை வெளியிட்டு பல பௌத்த அமைப்புகளும், பிக்குகளும் வீதிகளில் கிளர்ந்தெழத்தொடங்கினர்.

ஞானசார தேரரின் குமுறல்

ஞானசார தேரரும், சிறைச்சாலையில் தமக்கு காவி உடை அணிய அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பில் கடும் அதிருப்தியை வெளியிட்டார் .தனக்கு இதற்கு முன்னர் பல தடவைகள்

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு அரசாங்கமும் சிறைத் தண்டனைக் காலத்தில் காவி உடையை அகற்றுமாறு எனக்கு கூறியதில்லை,ஆனால், தற்போதைய அரசாங்கமே எனது காவி உடையை அகற்றி வெள்ளை நிற சிறை உடை அணிவித்துள்ளது.சிறைச்சாலையில் காவி உடை அணிவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பது தொடர்பில் மகா சங்கத்தினரே தீர்மானிக்க வேண்டும் "காவி உடை அணிந்திருந்தாலும், வெள்ளை சிறை உடை அணிந்திருந்தாலும் ஞானசாரர் எப்போதும் ஞானசாரர்தான்" அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொண்டே இதுவரை நான் செயற்பட்டு வந்தேன். இதனையும் எதிர்கொள்வேன் "பொறுத்திருந்து பார்ப்போம்" என தனது குமுறலை வெளிப்படுத்தினார்.

63 பிக்குகளுக்கு இல்லாத உரிமை ஞானசார தேரருக்கு மட்டும் ஏன்?

பௌத்த மகாசங்கங்கள்,அஸ்கிரியபீடங்கள், பிக்குகளின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான சேனக்க பள்ளேதன்ன கூறுகையில், சிறைச்சாலை விதிமுறைகளின்படி,3 ஆண்டுகளுக்கும் அதிகமான சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட எந்தவொரு நபரும் சிறைச்சாலையினால் வழங்கப்படும்



சிறை ஆடையைஅணிந்தே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும்.பௌத்த பிக்கு ஒருவருக்கு நீதிமன்றத்தினால் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்,அந்த தண்டனைக் காலத்தைச் சிறைச் சாலையில் கழிக்கும் போது அவர் தமதுகாவி ஆடையை அணிய முடியும்.

எனினும், விதிக்கப்பட்டது கடுழியச் சிறைத்தண்டனை என்றால் எந்தவொரு நபரும் சிறை ஆடையையே அணியவேண்டும். தண்டனை பெற்ற ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது,அவரது சிறைத்த ண்டனைக் காலம் 3ஆண்டுகளை விடக் குறைவானதாக இருந்தால், அவர் தண்டனைக்கு முன்னர் அணிந்திருந்த சாதாரண ஆடையை அணிவதற்குச் சிறைச்சாலை அத்தியட்சகர் அனுமதி வழங்க முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில்பௌத்த பிக்குகளுக்கும் காவி ஆடைஅணிய அனுமதி வழங்கப்படலாம். ஆனால், 3 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டஎந்தவொரு தராதரத்தைக் கொண்டநபராக இருப்பினும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படும் போது சிறைச்சாலையினால் வழங்கப்படும் ஆடையைஅணிந்தே ஆஜர்படுத்தப்பட வேண்டும். மேலும், நாட்டின் சிறைச்சாலைகளில்63 க்கும் மேற்பட்ட பிக்குகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் சிறைச்சாலையினுள் சிறை ஆடையையேஅணிந்துள்ளனர் என்று தெரிவித்தார் .

ஜனாதிபதிக்கு கடிதம்

இந்நிலையில் 4 பிரதான பிரிவுகளின் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு காரசாரமாக கடிதம் ஒன்றை அனுப்பினர் .அதில் ஒரு பௌத்த துறவியின் காவியுடையை அகற்றுவது அல்லது அவரைத் துறவறத்திலிருந்து நீக்குவது தொடர்பான முடிவுகளை பௌத்த மகா சங்கத்தினர் (மகாநாயக்க தேரர்கள்) தான் தீர்மானிக்க முடியும்.சிறைச்சாலை அதிகாரிகளோ அல்லது சிவில் சட்டங்களோ அதைத் தீர்மானிக்கக் கூடாது.ஒரு பிக்கு நீதிமன்றத்திற்கோ அல்லது வெளியே அழைத்துவரப்படும்போதோ சிறைச்சாலைச் சீருடையில் காண்பிக்கப்படுவது பௌத்த தர்மத்திற்கும், மத மரபுகளுக்கும் இழைக்கப்படும் அவமதிப்பு இது பௌத்தர்களின் மனதைப் புண்படுத்தியுள்ளது என்று கோபத்தை வெளிப்படுத்தினர்

காவியுடை களவைத் தடுக்கக்கோரி மனு

இதற்கிடையில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் ஞானசார தேரரின் காவி உடையை அகற்றுவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் எடுத்த முடிவை ரத்து செய்யக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. தினியாவல பாலித தேரர் தாக்கல் செய்த இந்த மனுவில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார , அமைச்சின் செயலாளர், மற்றும் புத்த சாசனம் மற்றும் சமய விவகாரங்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டனர்.

ஞானசார தேரர் ஒரு குடும்பஸ்தர்

இவ்வாறான நிலையில் ஞானசார தேரரின் காவியுடை நீண்ட காலத்துக்கு முன்னரே களையப்பட்டிருக்க வேண்டும் என ராஜாங்கனே சத்தாரத்ன தேரர் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 21ம் பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(18 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இதுவரை ஏற்பட்டு வந்த மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். வேலையில் இருப்பவர்களுக்கு எதிரிகளின் தொல்லைகள் விலகும், போட்டிகளில் வெற்றி கிடைக்கும், பதவி உயர்வு தேடி வரும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து லாபம் பெருகும், கடன் வசூலாகும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி நிலவும், சகோதரர்களால் ஆதாயம் உண்டு, திருமண தடைகள் விலகும். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும், தைரியம் அதிகரிக்கும். இந்த வாரம் சொத்து விஷயத்தில் அதிரடி வெற்றி உண்டு. நீண்ட நாட்களாக இழுபறியில் இருந்த வீடு, நில பிரச்சனை உங்களுக்கு சாதகமாக முடியும் பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் யோகம் போல, திடீர் சொத்து சேரும். வீட்டில் பழைய பொருட்களை மாற்றி புதுப்பிப்பீர்கள். திருமணத்தில் சற்று தாமதம் ஏற்படலாம், ஆனால் நல்ல வரனாக அமையும். காதல் விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும், ரகசியங்கள் வெளியாக வாய்ப்பு உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, கருஞ்சிவப்பு | எண்: 9 | நாள்: செவ்வாய்




**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உரிய சிகிச்சையின் மூலம் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். வீண்செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. மற்றவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க் கமுடியாது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை இல்லாத வாரம். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும். வெளியூரில், வெளிநாட்டில் சொத்து வாங்கும் யோகம் உண்டு. தந்தை வழி சொத்து கிடைக்கும். வீட்டை பெரிதுபடுத்தி கட்டுவீர்கள். பதவி உயர்வு நிச்சயம். தொழில் செய்பவர்களுக்கு புதிய முதலீடுகள் லாபம் தரும், தொழில் விரிவாக்கம் செய்யும் யோகம் உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும், பிள்ளைகளால் பெருமை உண்டாகும், திருமண முயற்சிகள் வெற்றியாகும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி உண்டு.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள் | நாள்: வியாழன்




**மகரம்:** மகரராசி அன்பர்களே! பணவரவுக்கு குறைவிருக்காது. ஆனாலும், எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளால் கையிருப்பு குறைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும் நேரிடும். சிலருக்கு தெய்வப் பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சற்று பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்களின் ஆலோசனைகள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்படும். அதன் காரணமாக சில சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. சக ஊழியர்களால் ஏற்பட்ட மறைமுகத் தொல்லைகள் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் சோர்வு உண்டாகும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை திருப்தி தருவதாக இருக்கும். நிலுவையில் இருந்த பணம் வசூலாகும், புதிய வீடு, நிலம் வாங்கும் யோகம் கைகூடும், வீடு கட்டும் பணிகள் தடையின்றி நடக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பணிச்சுமை குறைந்து நிம்மதி கிடைக்கும், நீண்ட நாள் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை பலப்படும், திருமண முயற்சிகள் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, ஆனால் பெரிய பிரச்சனை இருக்காது.

அதிர்ஷ்ட நிறம்: கருநீலம் | நாள்: சனி




**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் குறைவு என்பதால் சிறிது சேமிக்கவும் முடியும். பிள்ளைகள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தைவழி உறவினர்கள் வருகையால் வீட் டில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான வெளியூர்ப் பயணம் சாதகமாக முடியும். நீண்டநாள்களாக செலுத்த முடியாமல் இருந்த குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒரு சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த சலுகையும் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்கு தாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். விற்பனையைப் பெருக்குவதில் பணியாளர்கள் உற்சாகமாக ஈடுபடுவார்கள். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். நிலம் வாங்குவது, வீடு கட்டுவது போன்ற முயற்சிகள் வெற்றியாகும். பண வரவை பொறுத்தவரை பல வழிகளில் இருந்து பணம் வந்து சேரும், கடன் சுமை குறையும், புதிய முதலீடுகள் லாபம் தரும், வெளிநாட்டில் இருந்து பணம் வரும் யோகமும் உண்டு. வேலையில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரும், அதை சரியாக பயன்படுத்தினால் பதவி உயர்வு நிச்சயம், வெளிநாட்டு வேலைக்கு முயற்சிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். தொழில் செய்பவர்களுக்கு லாபம் பெருகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும், திருமணம் கைகூடும்.

அதிர்ஷ்டநிறம்: நீலம் | நாள்: சனி




**மீனம்:** மீனராசி அன்பர்களே! எதிர்பார்த்ததைவிடவும் வருமா-னம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத்தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். பணியின் காரணமாகப் பயணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்க வேண்டி வரும். வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கடன் கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். பண வரவை பொறுத்தவரை பல மடங்கு அதிகரிக்கும், பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டு, நீண்ட நாள் நிலுவையில் இருந்த சொத்து பிரச்சனைகள் உங்களுக்கு சாதகமாக முடியும், புதிய வீடு, நிலம் வாங்கும் யோகம் கைகூடும், வீடு கட்டி பாதியில் நிற்பவர்களுக்கு பணம் கிடைத்து வேலைகள் முடியும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு தேடி வரும், வெளிநாட்டு வாய்ப்புகள் கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைத்து லாபம் பெருகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும், குழந்தை பாக்கியம் எதிர்பார்ப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும்,

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், வெள்ளை | நாள்: வியாழன்

--------------------------------

## "முதுமை வாழ்வின் முழுமை" என்னும் பயனுள்ள நூலின் வெளியீட்டு விழா கனடாவில் இடம்பெறுகின்றது

இங்கிலாந்து வாழ் சுப்பிரமணியம் லோகநாதன் எழுதியுள்ள "முதுமை வாழ்வின் முழுமை" என்னும் நூல் வெளியீட்டு விழாவிற்கு கனடாவிலுள்ள "தமிழ் மூத்தோர்" அமைப்புகளிலிருந்து கணிசமான அளவில் அங்கத்தவர்கள் கலந்து கொண்டு இந்த நூலைப் பெற்று பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

**இங்ஙனம்,**
**உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடா கிளை**
**(416) 732-1608**



(19ம் பக்கத் தொடர்ச்சி)

## காவி““முன் மண்டியிட்ட ““சிவப்பு“ச் சட்டைகள்

ஞானசார தேரருக்கு மீண்டும்
காவியுடை அணிவிக்க வேண்டும் என சில பௌத்த பிக்குகள் பாதயாத்திரையை ஆரம்பித்த நிலையில், அந்த நடவடிக்கையை விமர்சித்த சத்தாரதன தேரர், பௌத்த தர்மத்தின் அடிப்படையில் காவியுடையை இழக்கச் செய்யக்கூடியதாகத் தாம் கருதும் பல்வேறு செயல்களில் ஞானசார தேரர் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம்சாட்டினார்.ஒரு தடவை அவர் குடித்து விட்டு மதுபோதையில் வாகனம் செலுத்தி நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார். அவருக்கு ஒரு மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிரான்ஸில் இருக்கின்றார்கள். ஆக காவியுடை களையப்படுவதற்கு இவ்வாறான தீய செயல்களே போதுமானது.
அப்போதெல்லாம் இந்த மகாநாயக்கர்களும், ஏனைய தேரர்களும் எங்கிருந்தார்கள்? மகாநாயக்கர்கள் மற்றும் மகாசங்கத்தினர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் ஜே.ஆர் ஜயவர்த்தனவுக்கு முன்பிருந்தவர்கள், அவருக்குப் பின் வந்த பிரேமதாச, சந்திரிக்கா, மகிந்த, மைத்திரி மற்றும் ரணில் எல்லோரும் இந்த நாட்டை ஆட்சி செய்தார்கள்.மேலும், ஞானசார தேரர் தொடர்பான கடந்தகால சர்ச்சைகள் எழுந்தபோது மகாநாயக்கர்கள் உள்ளிட்ட பௌத்த மதத் தலைவர்கள் ஏன் இதேபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.
ஜனாதிபதி -மகாசங்கத்தினர் சந்திப்பு
இவ்வாறான நிலையில் மகா சங்கத்தினர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்தனர் . இந்த சந்திப்பையடுத்து சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்ட விதிகள் மற்றும் நிலையானகட்டளைகளைப் புதுப்பிப்பதற்காக, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பணிப்புரையின் பேரில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர, நீதிமற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் பியுமந்தி பீரிஸ், பொது நிர்வாக,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளர் வசந்த ஆரியரத்ன,பௌத்த அலுவல்கள் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.ஜி. சேனாரத்ன,சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் ஒருவரான ஏ.சி. கஜநாயக்க ஆகியோர்இக்குழுவில் அங்கம் வகித்தனர்.
இந்த விசேட குழுவின் முதலாவது கூட்டம் அதன் தலைவரான புத்தசாசன, சமயமற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீரவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற நிலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பௌத்த பிக்குகள், சிறைச்சாலைக்கு வெளியே அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் காவி உடையை அணிவதற்கு அனுமதிக்க வேண்டும் என விசேட குழு பரிந்துரைத்தது.இது தொடர்பில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறுகையில், தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளிலுள்ள பிக்குகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட பௌத்த நிக்காய அந்தப் பிக்குவின் காவி உடையை அணியும் உரிமையை மறுக்காதவரை, சிறையில் உள்ள பிக்குகள் காவி உடையை அணியலாம். இதற்கமைய, சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் 356ஆம் நிலையான விதியில் திருத்தங்களை மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளது. சிறையில் அனுமதிக்கப்படும் பௌத்த பிக்கு ஒருவர் காவி உடையைக் களைய வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக, பௌத்த விவகாரத் திணைக்களத்துடன் கலந்தாலோசிக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.
மேலும், விசேட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக, நடைமுறையில் உள்ள சிறைச்சாலை விதிமுறைகள் மற்றும் நிலையான உத்தரவுகளைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலை கட்டளைச் சட்டத்தின் கீழுள்ள விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் நிலையான உத்தரவுகளை மீளாய்வு செய்து புதுப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு, தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்கவிடம் கையளித்துள்ளது என்று தெரிவித்தார்.
ரகுபதி சர்மாவிற்கு ஒரு நீதி
ஞானசார தேரருக்கு ஒரு நீதி
1999 ஆம் ஆண்டு, சந்திரிகா குமாரதுங்க மீதான குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாகச் வெறும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சைவ சமய மதகுருவான ரகுபதி சர்மாவை இலங்கையின் மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம் சிறைக்குள் தள்ளியது. மனித நாகரிகமே தலைகுனிய வேண்டிய சித்திரவதைக் கூடாரங்களுக்குள் அவர் இழுத்துச் செல்லப்பட்டார். ஒரு இந்து மதகுரு என்ற தயவின்றி அவர் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆசாரமிக்க ஒரு இந்து அர்ச்சகராக, தீவிர சைவ உணவை மட்டுமே உண்டு வந்த அவரது பூணூல் மிருகத்தனமாக அறுத்தெறியப்பட்டது. அவரது மத நம்பிக்கையை மிதித்து, கட்டாயப்படுத்தி அசைவ உணவும் மதுபானமும் உண்ண நிர்ப்பந்தித்து மனத்தூய்மையை அவமதித்தார்கள்.
இது போதாதென்று தலைகீழாகத் தொங்கவிட்டு அடித்தார்கள். முட்கம்பி சுற்றப்பட்ட குழாயை ஆசனவாயில் நுழைத்து வெளியே இழுத்தார்கள் அந்தரங்க உறுப்புகளை மேசை இலாச்சியில் வைத்து நசுக்கினார்கள். அவருக்குத் துளியும் புரியாத சிங்கள மொழியில் எழுதப்பட்ட அறிக்கைகளில், சித்திரவதை மூலம் கையெழுத்து வாங்கினார்கள்.சட்ட மருத்துவ அறிக்கை அவரது உடலில் இருந்த தீக்காயங்களையும், தழும்புகளையும் தெளிவாக உறுதிப்படுத்தியது. ஆனாலும் நீதி கிடைக்கவில்லை. கைது செய்யப்பட்ட முதல் 18 மாதங்களுக்கு அவருக்குத் தன்னைப் பிரதிநிதித்துவம் செய்யச் சட்டத்தரணியை ஏற்பாடு செய்யக்கூட அனுமதி மறுத்தார்கள். இறுதியில் 300 ஆண்டுகள் சிறைத்தண்டனை என்ற இடி அவர் தலையில் இறக்கப்பட்டது.
சித்திரவதையின் வடுக்களால் அவரால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை. நீரிழிவு, இரத்த அழுத்தப் பிரச்சினைகளால் தளர்ந்த உடலோடு சிறையில் துடித்தார். தன்னுடைய பாவனைக்கு அவர் கேட்ட சக்கர நாற்காலிக்கு கூட அனுமதி மறுக்கப்பட்டது. சிறையில் கோவிட்-19 தொற்று வந்தபோது, படுக்கையிலேயே வலியால் கதறினார்.இந்த நரகத் துயரம் இவரோடு மட்டும் நிற்கவில்லை. இவரது மனைவி வசந்தி ரகுபதி சர்மாவும் கைது செய்யப்பட்டிருந்தார். கடுமையான சித்திரவதைகளுக்குப் பின், 15 ஆண்டுகள் சிறையில் கழித்தார். இறுதியில், 2015இல் நீதிமன்றத்தால் "குற்றமற்றவர்" என விடுவிக்கப்பட்டார்.
பெற்றோர் இருவரும் சிறைக்குள் முடங்கிக் கிடந்தார்கள். ஆதரவற்ற நிலையில் இருந்த அவர்களின் 6 மற்றும் 8 வயது குழந்தைகள் மட்டக்களப்பில் உள்ள ஓர் இல்லத்தில், பெற்றோர் அரவணைப்பின்றி ஏங்கித் தவித்த அவர்களின் வேதனை வார்த்தைகளில் அடங்காது. 22 ஆண்டுகளுக்கும் மேலான இளமைக்காலம், குடும்பத்தின் நிம்மதி, பிள்ளைகளின் எதிர்காலம் என அத்தனையையும் இழந்துவிட்டார்கள்.2022 நவம்பரில் ரணில் விக்ரமசிங்கவின் பொதுமன்னிப்பின் கீழ் இவர் வெளியே வந்தார்.
ஆனால் இதே நாட்டில் சமூகத்தில் வெறுப்பையும் இனவாதத்தையும் விதைத்து, தீவிர கிரிமினல் குற்றப் பின்னணியோடு நீதிமன்ற அவமதிப்புக்காக சிறை தண்டனை பெற்ற ஞானசார தேரர் விடயத்தில் மட்டும் சட்டத்தை மாற்றக்கோரி பிக்குகள் பாத யாத்திரை வருகின்றனர். காவியுடையில் சட்டம் கைவைத்து மகா பாவம் என எதிர்க்கட்சிகள் கலங்கித்துடிக்கின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வெறும் இரண்டு நாள்களுக்குள் காவியுடையை கழற்றிய சட்ட விதிகளையே தூக்கி எறிந்துவிட்டார் ."சட்டம் அனைவருக்கும் சமம்" என்ற போலி வார்த்தைகளின் பின்னாலிருக்கும் ஜே.வி.பி.யின் அதிகாரத்தின் கோர முகத்தை புரிந்து கொள்ள இந்த ஞானசார தேரர் உதவியுள்ளார்
காவியுடை முன்பாக
மண்டியிட்ட சிவப்பு சட்டை
ஆக மொத்தத்தில் சித்தாந்தங்கள் மாறலாம், தலைவர்கள் வரலாற்றின் பக்கங்களில் மறையலாம், ஆனால், இலங்கையின் அரசியல் களத்தில் காவி உடைகளின் செல்வாக்கு மட்டும் என்றும் மாறுவதுமில்லை மங்குவதுமில்லை. ஞானசார தேரர் விவகாரம் நமக்கு உணர்த்துவது ஒன்றைத்தான்.இலங்கையில் அரசியலமைப்பை விடவும், பாராளுமன்ற பெரும்பான்மையை விடவும் ,மக்களின் தெரிவை விடவும் மகாசங்கத்தின் முடிவே இறுதித் தீர்ப்பாக அமைகிறது. ஆட்சியாளர்கள் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட முற்பட்டாலும், காவி உடைக்கு முன்னால் தங்களின் "அதிகாரக் கிரீடத்தைக்" கழற்றி வைத்துவிட்டு தலைவணங்குவதை .அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை பிக்குகளுக்காக சிறை விதிகளை மாற்ற முடிவுசெய்து ““காவியுடை““முன்பாக மண்டியிட்ட சிவப்பு சட்டை ஜனாதிபதி அநுரகுமாரவின் சரணாகதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், இலங்கையில் ஆட்சிக் கட்டிலைத் தீர்மானிக்கும் உண்மையான அதிகாரச் சாவி, அரசாங்கத்திடம் இல்லை.அது காவி உடை உடுத்திய மகாசங்கத்தின் கைகளிலேயே எப்போதும் பாதுகாப்பாக இருக்கிறது.

**சினிமா நியூஸ்**

## "ஜெயிலர் 2" திரைப்படத்திற்கு யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ள இந்திய தணிக்கை வாரியம்




ரஜினிகாந்த நடித்த "ஜெயிலர் 2" படத்திற்கு தணிக்கை வாரியம் யு/ஏ சான்றிதழ் வழங்கியுள்ளது. நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில், ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி உள்ள இரண்டாவது படம் "ஜெயிலர் 2". ஜெயிலர் பட வெற்றியைத் தொடர்ந்து அதன் இரண்டாவது பாகமாக ஜெயிலர் 2 உருவாகி உள்ளது. இதில் ரஜினிகாந்த், மோகன்லால், சிவராஜ்குமார், எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சரமூடு என ஒரு நடிகர் பட்டாளமே நடித்துள்ளது. சன் பிக்சர்ஸ் சார்பில் கலாநிதி மாறன் தயாரிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். படம் அக்டோபர் 15ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. படத்தின் பாடல்கள், முன்னோட்டம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. இந்நிலையில் படத்திற்கு யு/ஏ தணிக்கை சான்றிதழை வழங்கியுள்ளது மத்திய திரைப்பட தணிக்கை வாரியம்.

## "பத்தா" படக்குழுவை கமல் நேரில் அழைத்து பாராட்டினார்

விஜய் சேதுபதி நாயகனாக நடித்த "பத்தா" திரைப்படக் குழுவை நடிகரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமல்ஹாசன் நேரில் அழைத்து பாராட்டினார். விஜய் சேதுபதி - இயக்குநர் பாலாஜி தரணிதரன் கூட்டணியில் வெளியான 3 ஆவது திரைப்படம் "பத்தா". கடந்த அக்டோபர் 1ம் தேதி திரையரங்குகளில் வெளியான இந்தப் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக லிஜோமோல் ஜோஸ் நடித்துள்ளார். குழந்தை நட்சத்திரம் சாய் பிரிதிவ் ராஜ் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். இப்படத்தை இயக்குநர் அட்லீயின் "ஏ பார் ஆப்பிள் ஸ்டுடியோஸ்" நிறுவனமும், "ஸ்டார் ஸ்டுடியோஸ் 18 - சினி1 ஸ்டுடியோஸ்" நிறுவனங்களும் இணைந்து தயாரித்துள்ளன.
ரவுடியான நாயகன் விஜய் சேதுபதி எதிர்பாராத சிக்கலில் சிக்கிக்கொள்ள, அதைச் செய்தவர் யார்? பத்தா அதனைக் கண்டுபிடித்தாரா இல்லையா? என்கிற கதையாக உருவான இது ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்று வருகிறது. முதல் நாளில் கிடைத்த நல்ல விமர்சனங்களால் இரண்டாம் நாளிலிருந்து டிக்கெட் விற்பனைகளும் அதிகரித்துள்ளன. இதனால், இப்படம் இதுவரை ரூ. 17 கோடி வரை வசூலித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



விஜய் சேதுபதியின் "பத்தா" படத்தை இயக்குநர் ஷங்கர் பாராட்டியிருந்தார். படத்தில் நடித்த குழந்தை நட்சத்திரம் சாய் பிருத்விராஜுக்கு தேசிய விருது வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், "பத்தா" திரைப்படத்தின் நாயகன் விஜய் சேதுபதி, இயக்குநர் பாலாஜி தரணிதரன், தயாரிப்பாளர் அட்லீ, இசையமைப்பாளர் சாய் அபயங்கர், நடிகர்கள் ஹரி கிருஷ்ணன், அர்ஜுன் சிதம்பரம் உள்ளிட்டோரை நடிகர் கமல்ஹாசன் நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்.

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers





32
வருட சேவைகள்

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL
FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524








உதயம் 1593 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 16, 2026

# "பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தமிழியல் ஆய்வு பற்றிய பங்களிப்புக்ளைக் கௌரவிக்க ஆய்வை மேற்கொண்டு கலாநிதித் பட்டம் பெற்ற முனைவர் திருமதி வாசுகியை நாம் கொண்டாட வேண்டும்"

## "பன்முக ஆற்றலான் கா. சிவத்தம்பியின் தமிழியல் பார்வை" நூல் வெளியீட்டுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் புகழாரம்



"இலங்கைத் தமிழர்களின் இலக்கிய திறனாய்வுத் துறையிலும் தமிழியல் தொடர்பான ஆய்வுத் துறைகளில் தன்னை ஈடுபடுத்தி உயர்ந்த அர்ப்பணிப்புடன் தன் வாழ்வை தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் வாழ்ந்து மறைந்த பேராசிரியர்கா. சிவத்தம்பி அவர்களின் தமிழியல் ஆய்வு மற்றும் இலக்கியத் திறனாய்வுப் பங்களிப்புக்ளைக் கௌரவிக்கும் வகையில் தனது ஆய்வை மேற்கொண்டு கலாநிதித் பட்டம் பெற்ற முனைவர் வாசுகி நகுலராஜா அவர்களை நாம் கொண்டாடி மகிழ்ந்து அவரையும் அவரது குடும்பத்தினரை மகிழ்ச்சியில் ஆழ்த்த வேண்டும்"

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# பிரம்ரன் மேயராக மீண்டும் தெரிவு செய்யப்பெறுவார் என்ற நம்பிக்கையோடு பெற்றிக் பிரவுணை வாழ்த்துவதற்காக பிரம்ரன் ஸ்ரீ சபரி பீடத்தில் கூடிய அடியார்கள்!



மக்கள் ஆதரவோடு **Barrie** தொகுதியின் கனடிய பாராளுமன்ற "தமிழ் மக்களின் நண்பன்" என்று அன்பாக நேசிக்கப்பெறும் பெற்றிக் பிரவுண் அவர்கள் பிரம்ரன் நகரின் மேயராக தேர்ந்தெடுக்கப்பெற்ற நாள் தொடக்கம் பிரம்ரன் நகர மக்களுக்கும் அதேபோன்று தமிழ் மக்களுக்கும் ஆதரவாக இருக்க வேண்டும் என்பதை பல வழிகளில் நிரூபித்து வருகின்றார்.
அவ்வாறாக மக்கள் ஆதரவோடு மீண்டும் தெரிவு செய்யப்பெறுவார் என்ற நம்பிக்கையோடு தற்போதைய மேயராக விளங்கும் பெற்றிக் பிரவுண் அவர்களை வாழ்த்துவதற்காக 470 **Chrysler Dr Unit 9-10, Brampton**, என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "பிரம்ரன் ஸ்ரீ சபரி பீடத்தில்" கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று கூடிய ஐயப்பன் அடியார்கள் மகிழ்ச்சியுடன் காணப்பெற்றனர்.

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

# "காவி" முன் மண்டியிட்ட "சிவப்பு"ச் சட்டைகள்



"இலங்கையில் அரசியலமைப்பை விடவும், பாராளுமன்ற பெரும்பான்மையை விடவும் ,மக்களின் தெரிவை விடவும் மகாசங்கத்தின் முடிவே இறுதித் தீர்ப்பாக அமைகிறது. ஆட்சியாளர்கள் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட முற்பட்டாலும், காவி உடைக்கு முன்னால் தங்களின் "அதிகாரக் கிரீடத்தைக்" கழற்றி வைத்துவிட்டு தலைவணங்குவதை, .அடி-பணிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை பிக்குகளுக்காக சிறை விதிகளை மாற்ற முடிவுசெய்து""காவியுடை""முன்பாக மண்டியிட்ட சிவப்பு சட்டை ஜனாதிபதி அநுரகுமாரவின் சரணாகதி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது""-------கே.பாலா

(தொடர்ச்சி 19ம் பக்கம்)






# ரொறன்ரோ கத்தோலிக்க பாடசாலைகளின் கல்விச் சபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடும் மேரி கியூரி போல்!

மேரி கியூரி போல் அவர்கள் கத்தோலிக்க பாடசாலைகளின் கல்விச் சபை உறுப்பினராக போட்டியிடுகிறார். இவர் மருத்துவர் போல் ஜோசேப் அவர்களின் புதல்வி ஆவார். பல்வேறு தமிழ் சமூக அமைப்புகளில் தன்னை ஈடுபடுத்தி பணியாற்றி வருவதோடு, மாணவர்களுக்கான தமிழ் மொழி பயிற்சியிலும் ஆசிரியராக திகழ்வதோடு, மொழி சார்ந்த ஆய்வு கட்டுரைகள் பலவற்றையும் வெளியிட்டுள்ளார். இவரின் சில ஆய்வு கட்டுரைகளை தமிழகத்தின் பல பல்கலைக்கழக ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டாக தங்கள் ஆய்வுகளிலும் பயன்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. **Scarborough North** மற்றும் ஸ்காபுறோ **Rouge Park** இந்தப் பகுதியில் ரொரன்ரோ கத்தோலிக்க கல்விச் சபையின் உறுப்பினர் பதவிக்கு போட்டியிடுகிறார். எனவே தமிழச் சமூகமாக இவருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வோம்.